வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடுறவுபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு நியதிச்சட்டம்

---

இந்நியதிச்சட்டம் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்துடனும் திருத்தப்பட்டவாறான 1982ஆம் ஆண்டின் 43ஆம்இலக்க, முத்திரை வரிச் சட்டத்துடனும் ஒத்திசைவற்றதாகும்.

...............மாகாணத்தின் மாகாண சபையால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1.(1) இந்நியதிச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மாகாணத்தின் நிதி நியதிச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்; அத்துடன் அதன் ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) அமைச்சர் வெவ்வேறு பாகங்கள் தொடர்பில் வெவ்வேறு தேதிகளை நியமிக்கலாம். பாகம் 1 அல்லது 2 நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் போதிலெல்லாம் மேற்சொல்லப்பட்ட 1ஆம் அல்லது 2ஆம் பாகங்களுள் முதலாவது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் தேதியிலிருந்து 3ஆம் 8ஆம் பாகங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டனவாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் 4ஆம் 5ஆம் 6ஆம் அல்லது 7ஆம் பாகம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் போதிலெல்லாம் 8ஆம் பாகம், அது ஏற்கனவே நடைமுறையில் இல்லையாயின், மேற்சொல்லப்பட்ட4ஆம் 5ஆம் 6ஆம் 7ஆம் பாகங்களுள் முதலாவது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அலுவலர்களை நியமித்தல்.

2. இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக, மாகாண அரசிறை ஆணையாளர் ஒருவரும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான மாகாணப் பிரதி ஆணையாளர்களும் மாகாண வரிமதிப்பீட்டாளர்களும் அத்தகைய வேறு அலுவலர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் 1

## அத்தியாயம் 1

## <u>மொத்த விற்பனை வரவு வரியை விதித்தல்</u>

மொத்த விற்பனை வரவு வரியை விதித்தல்.

3.(1) பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டத்தின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் இந்நியதிச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைவாக, 1991 ஜனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிற்காகவும் மாகாணத்தில் தொழில் எதனையும் கொண்டுநடாத்துகின்றவரான ஒவ்வோர் ஆளிடமிருந்தும் அந்தத் தொழிலிருந்து அந்த ஆளினால் பெறப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்துக்குக்காலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான வரியொன்று இறுக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "மொத்த விற்பனை வரவு வரி" எனக் குறிப்பிடு செய்யப்படும்)

(2) இந்த அத்தியாயத்தின் நோக்கத்துக்காக, "தொழில்" என்பது ஏதேனும் வியாபாரப் பொருளை அல்லது பொருளை மொத்த விற்பனை மூலம் அல்லது சில்லறை விற்பனை மூலம் விற்றல் என்று பொருளாகும். ஆனால் உற்பத்தியாளர் ஒருவரினால் செய்யப்படும் விற்பனையொன்றை உள்ளடக்காது.

எந்தச் சந்தர்ப்பங்களில் ஆளொருவர் மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப் படற்பாலராக வருவார் என்பது.

4.(1) ஆள் ஒருவர் மாகாணத்தில் தம்மால் கொண்டுநடாத்தப்படுவதான ஏதேனும் தொழில் தொடர்பில் ஒவ்வொரு காலாண்டிற்காகவும் மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராதல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் தம்மால் கொண்டு நடாத்தப்படுவதான ஏதேனும் தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராக இருக்குமிடத்தும் அத்துடன் அந்தத் தொழிலின் சொந்தாண்மையில் மாற்றம் ஏற்படுமிடத்தும், அந்தத் தொழிலின் புதிய சொந்தக்காரரானவர் சொந்தாண்மை மாறுவதற்கு உடன்முன்னர் அந்தத் தொழிலுக்கு அவரே சொந்தக்காரராக இருந்தார் என்றுபோன்று மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராதல் வேண்டும்.

## அத்தியாயம் 11

## விலக்களிப்புகள்

மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களித்தல்.

5.(1) அமைச்சரானவர், மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானதென அவர் அபிப்பிராயப்படின், எவரேனுமாயினும் கொண்டுநடாத்தப்படுவதான ஏதேனும் தொழிலை அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொழிலை கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) உட்பிரிவின்கீழான கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்றினுள் அல்லது அத்தகைய காலப்பகுதியினுள் மாகாண சபைக் கூட்டமெதுவும் நடைபெறாவிடின், அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் நடைபெறும் முதலாவது மாகாண சபைக் கூட்டத்தில் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்ற பிரேரணை ஒன்றன் மூலம் மாகாண சபையின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(3) மாகாண சபை அங்கீகரிக்க மறுக்கும் ஏதேனும் கட்டளை அத்தகைய மறுப்புத் தேதியிலிருந்து ஆனால் அத்தகைய மறுப்புத்தேதிவரை அத்தகைய கட்டளையின் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

## அத்தியாயம் III

## மொத்த விற்பனை வரவு

மொத்த விற்பனை வரவு.

6. (1) இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக, ஏதேனும் தொழில் தொடர்பாக, "மொத்த விற்பனை வரவு" என்பது அந்தத் தொழில் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்படற்பாலதான மொத்தத் தொகை எனப் பொருளாகும்.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "மொத்த விற்பனை

(4) காலாண்டொன்றுக்காக ஒரு தொழிலின் மொத்த விற்பனை வரவை நிச்சயிப்பதில், அவ்வாண்டின்போது அறவிடமுடியாக் கடனென்றாக வந்துள்ளதாய் அத்தொழிலினால் உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடனுக்குச் சமமானதும், முன்னையவொரு காலாண்டுக்கு அத்தொழிலின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டுள்ளதோ அத்தொகையாகவுள்ளதுமான ஒரு தொகை கழிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், அறவிடடையாக் கடனென்று தொடர்பில் இவ்வுட்பிரிவின்கீழ் முன்னர் கழிக்கப்பட்ட ஒரு தொகையின் கணக்கால் அத்தொழிலினால் ஏதேனும் காலாண்டில் பெறப்படும் ஏதேனும் பணத்தொகை, அப்பணத்தொகை எவ்வாலாண்டிற்கெனப் பெறப்படுகின்றதோ அக்காலாண்டிற்கு அத்தொழிலின் மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

மொத்த விற்பனை வரவு வரி வீதம்.

7. (1) ஏதேனும் தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி வீதமானது, அத்தகைய தொழிலின் தன்மையினைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன்மூலம் தீர்மானிக்கப்படலாம் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய வரியின் வெவ்வேறு வீதங்கள், தொழில்களின் வெவ்வேறு வகுப்புகள் அல்லது விவரணங்கள் தொடர்பில் அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படலாம்.

(2) ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி வீதமானது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் காலத்திற்குக்காலம் அமைச்சரால் வேறுபடுத்தப்படலாம்.

✓ (3) ஒராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு தீர்மானமும், அத்துடன் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதான ஒவ்வொரு கட்டளையும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அத்தகைய தீர்மானத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன்,, அத்தகைய தீர்மானம் அல்லது கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள்ளாகப் மாகாண சபைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லையாயின் அத்தகைய தீர்மானம் அல்லது கட்டளை, அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்ற பிரேரணை ஒன்றின்மூலம் அத்தகைய காலப்பகுதி முடிவடைந்ததன்பின்னர் நடைபெறும் மாகாணசபையின் முதலாவது கூட்டத்தில் மாகாணசபையின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அப்பிரேரணை எந்தத் தீர்மானம் அல்லது கட்டளை பற்றியதாகவுள்ளதோ அந்தத் தீர்மானத்தின் அல்லது கட்டளையின் உள்ளடக்கமும் அத்தகைய ஒவ்வொரு பிரேரணைக்குமான அட்டவணையில் தரப்படுதல் வேண்டும்.

(4) மாகாண சபை அங்கீகரிக்க மறுப்பதான (1)ஆம் உட்பிரிவின் கீழான தீர்மானம் எதுவும், அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை எதுவும், அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்கு பங்கமின்றி, அத்தகைய மறுப்புத் தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளை ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விலக்கப்பட்ட பொருட்கள். 8. அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் பொருளை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக விலக்கப்பட்ட பொருளொன்றாக வெளிப்படுத்தலாம். வெவ்வேறான வகுப்புகளை அல்லது விவரணங்களைச் சேர்ந்த தொழில்கள் தொடர்பில் வெவ்வேறு பொருள்கள் விலக்கப்பட்ட பொருள்களாக வெளிப்படுத்தப்படலாம்.

9அ ஆ பொருள் ஒன்று, 8ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த தொழில் தொடர்பில் விலக்கப்பட்ட பொருளொன்றாக வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய பொருளின் விற்பனையினால் தேறிப் பெறப்பட்ட பணத்தொகை தொடர்பில் அல்லது அத்தகைய பொருளின் இறக்குமதி தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரியெதுவும் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

## அத்தியாயம் V
### விவரத்திரட்டுக்கள்

விவரத்திரட்டுகளும் தகவலும்.

10. (1) மாகாணத்தில் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துபவரான ஆள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும், அவ் காலாண்டு முடிவடைந்ததன்பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் அந்தக் காலாண்டுக்காக எந்தத் தொழிலின் மொத்த விற்பனை வரவினைக் காட்டும் விவரத்திரட்டொன்றினை மாகாண ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய விவரத்திரட்டு ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய படிவத்தில் தரும்படி தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா விவரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாளர் ஒருவர் எழுத்திலான அறிவித்தல்மூலம் அந்த வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி மொத்த வரவு வரி இறுக்கப்படற்பாலரான ஆளாகவுள்ள ஒருவரை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியதான காலத்திற்குள்ளாக வரிமதிப்பீட்டாளருக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டதான விவரத்திரட்டு ஒன்றினைக் கொடுத்துதவுமாறு பணிக்கலாம்.

(3) எவரேனும் ஆளினால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் தொழிலிருந்து பெறப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பிலான முழுத் தகவலையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக, வரிமதிப்பீட்டாளர் ஒருவர் அத்தகைய ஆளை –

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக, அந்த அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறுள்ளவையும் அவரதுஉடைமையிலுள்ளவையுமான அத்தகைய எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப் பட்டியல்களை, கையிருப்புப் பட்டியல்களை, இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைகளை, ஊக் பணம்செலுத்தும் துண்டுகளை கணக்காய்வாளர் அறிக்கைகளை, அல்லது வேறு ஆவணங்களைப் பரிசோதனைக்கென முன்வைக்குமாறும் அல்லது வரிமதிப்பீட்டாளருக்கு அனுப்புமாறும்;

(ஆ) அந்தத் தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு பற்றி விசாரணை செய்யப்படும் நோக்கத்திற்கென அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அத்தகைய இடத்திலும் அத்தகைய தேதியிலும் அத்தகைய நேரத்திலும் நேரில் அல்லது அதிகாரம் பெற்றவரான பிரதிநிதி ஒருவர்மூலம் வருகைதருமாறும்,

தேவைப்படுத்தி, அத்தகைய ஆளுக்கு எழுத்திலி அறிவித்தல் ஒன்றினை வழங்கலாம்.

(4) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பிரதி ஆணையாளர் ஒருவர் எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆளை—

(அ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவையும் அவரது உடைமையிலுள்ளவையுமான அத்தகைய எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப் பட்டியல்களை, கையிருப்புப் பட்டியல்களை இடாப்புகளை, உறுதிச்சீட்டுகளை, காசோலைகளை, பணம்செலுத்தும் துண்டுகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை, அல்லது வேறு ஆவணங்களை முன்வைக்குமாறும் அல்லது அத்தகைய பிரதி ஆணையாளருக்கு அனுப்புமாறும்;

(ஆ) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அத்தகைய ஏதேனும் கருமம் பற்றி அல்லது கருமங்கள்பற்றி விசாரணை செய்யப்படுவதற்காக, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுள்ள அத்தகைய இடத்திலும் அத்தகைய

நேரிலும் அத்தகைய நேரத்திலும் நேரில் அல்லது அதிகாரம் பெற்றவரான பிரதிநிதி ஒருவர்மூலம் வருகைதருமாறும், தேவைப்படுத்தி, எழுத்தில் அறிவித்தல் ஒன்றினை வழங்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டதான அறிவித்தல ஒன்றுக்கு இணங்கியொழுகும் வகையில் வருகை தந்துள்ளவரான ஆள் ஒருவருக்கு அவ்வாறு வருகைதருவதில் அவரால் நியாயமாக உறப்பட்ட செலவுகள் ஆணையாளர் அதிபதியால் அனுமதிக்கப்படலாம்.

பிரதி ஆணையாளர் ஒருவர் அல்லது ஆணையாளர் ஒருவரின் அங்கீகாரத்துடன் வரிமதிப்பிட்டாளர் ஒருவர், இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பிடித்துவைத்திருத்தல் அவசியமானவரையில், எவையேனும் புத்தகங்களை, கணக்குகளை, வியாபாரப் பட்டியல்களை, கையிப்புப் பட்டியல்களை, இடாப்புகளை உறுதிச்சீட்டுகளை, காசோலைகளை பணஞ்செலுத்தும் துண்டுகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது (3)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (4)ஆம் உட்பிரிவின்கீழ், அவர் முன்னர் வைக்கப்படுகின்றவையான அல்லது வைக்கப்பட்டுள்ளவையான அல்லது அவருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றவையான அல்லது வைக்கப்பட்டுள்ளவையான, அல்லது அவருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றவையான அல்லது உடமைக்கு வந்துள்ளவையான வேறு ஆவணங்களைத் தமது கட்டுக்காவலில் அவ்வாறு பிடித்து வைத்திருக்கலாம்.

(6) வரிமதிப்பிட்டாளர் ஒருவர் தாம் அவசியமானதெனக் கருதும் போதும் அவசியமானதெனக் கருதும் அத்தனை தடவைகளுக்கும், எவரேனும் ஆளுக்கு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாக–

(அ) முழுமையான அல்லது மேலதிக விவரத்திரட்டுகளை; அல்லது

(ஆ) வரிமதிப்பிட்டாளரின் அபிப்பிராயப்படி, அத்தகைய ஆளால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியினை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதாகவுள்ள அல்லது இயைபானதாகவுள்ள ஏதேனும் கருமம் தொடர்பான முழுமையான அல்லது மேலதிக தகவல்களை,

கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலை வழங்கலாம்.

(7) எவரேனும் ஆளால் அல்லது எவரேனும் ஆள் சார்பில் இந்தியச் சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்பட்டதாகக் கொள்ளப்படுவதான விவரத் திரட்டொன்று, கூற்றொன்று அல்லது படிவம் ஒன்று, எல்லா நோக்கங்களுக் காகவும், முரணானது எண்பிக்கப்பட்டாலன்றி, விடயத்திற்கு ஏற்ப அந்த ஆளினால் அல்லது அவரின் அதிகாரத்தின்பேரால் கொடுத்துதவப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விவரத்திரட்டில், கூற்றில் அல்லது படிவத்தில் ஒப்பமிடும் எவரேனும் ஆள் அத்தகைய அதன் கண் அடங்கியுள்ள கருமங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டவராகவே கருதப்படுதலும் வேண்டும்.

(8) எவரேனும் ஆள், (2)ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பிட்டாளர் ஒரு வரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடு களுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தலொன்றின்மூலம்—

(அ) அத்தகைய ஆளின்மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு தண்டத்தைச் சுமத்தலாம்; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய தண்டத்தைச் செலுத்துமாறும்; அத்துடன்

(ii) வரிமதிப்பிட்டாளரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள விவரத்திரட்டை ஆணையாளர் தலைமையதிபதியின் அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுட் கொடுத்துதவுமாறும்,

அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(9) எவரேனுமாள் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்குத் தவறியுள்ள தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் காரண மானதென்றும், தண்டம் சுமத்தப்பட்ட பின்னர் தாம் அத்தகைய விவரத் திரட்டைக் கொடுத்துதவியுள்ளாரென்றும் ஆணையாளரின் திருப்திக்கு அத் தகைய ஆள் எண்பிப்பாராயின், ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின் கீழ் எவரேனுமாள்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

(10) எட்டாம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாள் மீது தண்டமொன்று சுமத்தப்படுமிடத்து, அவ்வறிவித்தல் தொடர்பாக 35ஆம் பிரிவின்கீழான தவறென்றுக்கான குற்றவழக்கொன்றுக்கு அவர் ஆளாதலாகாது.

அத்தியாயம் VI
வரிக்கொடுப்பனவு

மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவு.

11. ஏதேனும் காலாண்டு தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரியானது, அந்தக் காலாண்டு முடிவுதனை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப்பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது எந்த ஆளால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆள், அல்லது ஏதேனும் வரியானது ஒருவருக்கு அதிகமான ஆட்களால் அல்லது பங்குடைமை ஒன்றினால் செலுத் ப்படற்பாலதாயுள்ளவிடத்து, அப்போது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரும், அத்துடன் பங்குடைமையிலுள்ள ஒவ்வொரு பங்காளியும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தவணை தவறுமைக்கான தண்டம்.

12. (1) ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரியானது தவணை தவறியதாக இருக்குமிடத்து, தவணைதவறியவர், தவணைதவறியதாக உள்ள அத்தகைய வரியுடன் சேர்த்து மேலதிகமாக–

(அ) தவணைதவறியதாக உள்ள தொகையில் பத்து வீதத்திற்குச் சமமானதான ஒரு தொகையினைத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரியானது தவணைதவறியதாக வரத்தொடங்கிய மாதத்திற்கு அடுத்த மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர், தவணைதவறியதாக உள்ள ஏதேனும் தொகை செலுத்தப்படாதிருக்குமிடத்து, வரியானது தவணைதவறியதாக உள்ள காலப்பகுதியின் ஒவ்வோர் அடுத்துவரும் மாதத்தின் அல்லது அத்தகைய காலப்பகுதியின் பாகத்தின் பதினைந்தாம் நாளில் முடிவடையும் ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும்

தவணைதவறியதாக உள்ள தொகையின் இரண்டு வீதத்திற்குச் சமமான ஒரு தொகையினைத் தண்டமாகச் செலுத்துதல் வே வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ், தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான முழுத்தொகையானது எந்தச் சந்தர்ப்பத்திலும், தவணைதவறியதாக உள்ள வரியின் ஐம்பது வீதத்தை விஞ்சுதலாகாது என்பதுடன், தவணைதவறியமை ஏற்பட்ட எவையேனும் சிறப்புச் சூழ்நிலைகளின் காரணமாக அத்தகைய ஏதேனும் தொகையினை விட்டு விடுதல் அல்லது குறைத்தல் நீதியானதும் ஒப்புரவானதும் என ஆணையாளர் தலைமையதிபதியானவர் திருப்திப் படுமிடத்து, அத்தகைய தொகை விட்டுவிடப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

(2) எழுபத்தொன்பதாம் பிரிவின்கீழான மேன்முறையீடொன்றின் இறுதியான தீர்மானத்தின்மேல், (1)ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் பணத் தொகை அல்லது பணத்தொகைகள், தவணைதவறியதாக உள்ள எந்த வரியுடன் சேர்க்கப்பட்டதோ அல்லது சேர்க்கப்பட்டனவோ அந்த வரி குறைக்கப்படுமிடத்து, அப்போது அத்தகைய பணத்தொகை அல்லது பணத்தொகைகள், அவ்வாறு குறைக்கப்பட்டவாறான வரியின்மீது கணக்கிடப் படுதல் வேண்டும்.

~~அத்தியாயம்~~

~~வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்டு, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டனவான பொருள்களின்மீது மொத்த விற்பனை வரவு வரியினை விதித்துச் சேகரித்தல்~~

## அத்தியாயம் VII

### வரிமதிப்பீடுகள்

வரிமதிப்பீடு செய்வதற்கு வரிமதிப்பீட்டாளருக்குள்ள தத்துவம்.

13.(1) எவரேனும் ஆள்-

(அ) வரிமதிப்பீட்டாளர் ஒருவரின் அபிப்பிராயப்படி மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராயிருந்து ஏதேனும் காலாண்டுக்காக 10ஆம் பிரிவின்கீழ் விவரத்திரட்டொன்றினைக் கொடுத்தலுந் தவறுமிடத்து,

(ஆ) மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராயிருந்து ஏதேனும் காலாண்டு தொடர்பில் 10ஆம் பிரிவின்கீழ் விவரத் திரட்டொன்றைக் கொடுத்தவிடத்து, அக்காலாண்டுக்கான வரியைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து,

மாகாண வரிமதிப்பீட்டாளரானவர், வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி அத்தகைய ஆள் அக்காலாண்டுக்கெனச் செலுத்தியிருக்கவேண்டியதான மொத்த விற்பனை வரவு வரியின் தொகையினை வரிமதிப்பீடு செய்தல் வேண்டும் என்பதுடன் எழுத்திலான அறிவித்தல்மூலம் அந்த ஆளை அத்தகைய தொகையினை உடனடியாகச் செலுத்துமாறு தேவைப்படுத்தலும் வேண்டும். ஒரு காலாண்டிற்கென எவரேனும் ஆள் தொடர்பில் அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்டதான தொகை, 14ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அந்தக் காலாண்டிற்கென அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரித்தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் காலாண்டுக்கான ஏதேனும் ஆள் தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டதான வரிமதிப்பீடு ஒன்று வரிமதிப்பீடு செய்யப்பட்டதான தொகை அந்தக் காலாண்டுக்காக அவரிடமிருந்து வருமதியாக உள்ளதான மொத்த விற்பனை வரவு வரித்தொகை என்றுபோன்று 12ஆம் பிரிவின்கீழான தண்டம் ஒன்றைச் செலுத்துவதற்கு அத்தகைய ஆளுக்குரிய பொறுப்பினைப் பாதிப்பதாகாது.

(3) மாகாண வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி 10ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் காலாண்டு தொடர்பில விவரத்திரட்டொன்றினைக் கொடுத்துவத் தவறியவரான எவரேனும் ஆளினால் அந்தக் காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவு வரியாகச் செலுத்தப்பட்டதான தொகை, அந்தக் காலாண்டிற்கென அந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதான முறையான தொகையைவிடக் குறைவானதாக இருக்குமிடத்து, வரிமதிப்பீட்டாளரானவர், மாகாண வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்டிருக்கவேண்டியதான தொகையினை வரிமதிப்பீடுசெய்தல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான அறிவித்தல்மூலம் அவ்வாறு வரி மதிப்பீடு செய்யப்பட்டதான தொகைக்கும் அந்த ஆளினால் செலுத்தப்பட்டதான தொகைக்குமிடையே உள்ள வித்தியாசத்தினை அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(4) ஏதேனும் காலாண்டிற்கென எவரேனும் ஆள் தொடர்பில் (3)ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்டதான தொகைக்கும் அந்தக் காலாண்டிற்கான மொத்த விற்பனை வரவு வரியாக அந்த ஆளால் செலுத்தப்பட்டதான தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம், அந்தக் காலாண்டிற்காகத் தவணைதவறியதாக உள்ள மொத்த விற்பனை வரவு வரியாகக் கருதப்படுதல வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய ஆள் 10ஆம் பிரிவின்கீழ் அந்தக் காலாண்டிற்கென எத்தேதியிலிருந்து அந்த வரியினைச் செலுத்தியிருக்க வேண்டுமோ அத்தேதியிலிருந்து அந்தத் தொகை தொடர்பில் 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான தண்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

மேலதிக வரி மதிப்பீடுகள்.

14. (1) மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப்படற்பாலதான ஆள் ஒருவர், ஏதேனும் காலாண்டிற்கான வரியாக அந்தக் காலாண்டிற்காகத் தம்மால் செலுத்தப்படற்பாலதான அல்லது அந்தக் காலாண்டிற்கென அவரிடமிருந்து இறுக்கப்படற்பாலதான முறையான வரித்தொகையிலும் பார்க்கக் குறைந்த ஒரு தொகையைச் செலுத்தியுள்ளார் என வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்குத் தோன்றுமிடத்து, வரிமதிப்பீட்டாளர் ஒருவர் எந்நேரத்திலாயினும் வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி, அத்தகைய ஆளால்

வரிசெலுத்தப்பட்டிருக்கவேண்டியதான மேலதிகத் தொகையில் அத்தகைய ஆளை வரிமதிப்பீடு செய்யலாம். வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலை வரிமதிப்பீட்டாளர் அத்தகைய ஆளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

15. ஏதேனும் காலாண்டிற்கென எவரேனும் ஆள் தொடர்பில் 14 ஆம் பிரிவின்கீழ் வரிமதிப்பீடு ஒன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்டதான தொகை, அந்தக் காலாண்டிற்காகச் செலுத்தத் தவறியதாக உள்ள மொத்த விற்பனை வரவு வரியெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அத்தகைய ஆளானவர், 14ஆம் பிரிவின்கீழ் அந்தக் காலாண்டிற்கென அத்தகைய ஆள் வரிசெலுத்தியிருக்கவேண்டியதான தேதியிலிருந்து அத்தகைய தொகை தொடர்பில் 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழான தண்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

வரிமதிப்பீட்டாளர் விவரத்திரட்டொன்றினை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களை தருதல்.

16. வரிமதிப்பீட்டாளர் ஒருவர், ஏதேனும் காலாண்டிற்கென 10ஆம் பிரிவின்கீழ் எவரேனும் ஆளினால் கொடுக்கப்பட்டதான விவரத்திரட்டொன்றினை ஏற்றுக்கொள்ளாமல், 13ஆம் பிரிவின்கீழ் அல்லது 14ஆம் பிரிவின்கீழ் அந்தக்காலாண்டிற்காக அந்த ஆளின்மீது வரிமதிப்பீடு ஒன்றினை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றினைச் செய்யுமிடத்து, அவர் அந்த ஆளுக்கு விவரத்திரட்டினை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களை எழுத்திலான பதிவஞ்சல்மூலம் அறிவித்தல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### வரிமதிப்பீடுகளின் இறுதியான தன்மையும் செம்மையற்ற விவரத்திரட்டுகளுக்கான தண்டமும்

வரிமதிப்பீடுகள் அல்லது திருத்தப்பட்ட வரிமதிப்பீடுகள் இறுதியானவையாக இருத்தல்.

17. மொத்த விற்பனை வரவு வரி தொடர்பான வரிமதிப்பீடொன்றுக்கெதிராக இந்நியதிச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செல்லுபடியான மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து அல்லது அத்தகைய வரித்தொகை 79(5)ஆம் பிரிவின்கீழ் உடன்பட்டுக் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அல்லது மேன்முறையீட்டின்மீது தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து விடயத்திற்கேற்ப, மேன்முறையீட்டின்மீது செய்யப்பட்டவாறான அல்லது உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான அல்லது குறைக்கப்பட்டுள்ளவாறான அல்லது அதிகரிக்கப்பட்டவாறான அல்லது குறைக்கப்பட்டவாறான

வரிமதிப்பு, இந்நியதிச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய வரித்தொகை தொடர்பாக இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்:

ஆயின், ஏதேனும் காலாண்டிற்கென மேன்முறையீட்டின்மீது தீர்மானிக்கப்பட்டதான கருமம் எதனையும் திரும்பவும் பரிசீலனைக்கு எடுப்பதை வரிமதிப்பீடொன்று அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்று உள்ளடக்காது விடின், அந்தக் காலாண்டிற்கான அவ்வரிமதிப்பீட்டை அல்லது மேலதிக வரிமதிப்பீட்டைச் செய்வதிலிருந்து வரிமதிப்பீட்டாளர் ஒருவரை இச்சட்டத்திலுள்ள எதுவும் தடுப்பதாகாது.

**மொத்த விற்பனை வரவு வரியினைக் குறைந்துச் செலுத்துவதற்கான தண்டனை.**

18. எவரேனும் ஆள் தொடர்பில் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்றில் அவரது விவரத்திரட்டில் குறைத்துரைக்கப்பட்டதான மொத்த விற்பனை வரவு தொடர்பில், அவரிடமிருந்து வருமதியாக உள்ள தொகையென அவரால் ஏற்கனவே செலுத்தப்பட்டதான தொகையினை மொத்த விற்பனை வரவு வரித்தொகையானது விஞ்சுமிடத்தும், வரிமதிப்பீடானது 11ஆம் பிரிவின்கீழ் இறுதியானதும் முடிவானதுமாக இருக்குமிடத்தும் அந்தஆள் தமது விவரத்திரட்டில் மொத்த விற்பனை வரவினைத் தாம் வெளியிட்டதில், அல்லது அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பாக மொத்த விற்பனை வரவு வரி வீதங்களை பிரயோகிப்பதில் மோசடி அல்லது வேண்டுமென்றசட்டை எதுவும் இருக்கவில்லையென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமாறு எண்பித்தாலன்றி, ஆணையாளர் தலைமையதிபதியானவர் செம்மையற்ற விவரத்திரட்டைத் தயாரித்தமைக்காக அல்லது அவரது விவரத்திரட்டில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவுக்காகச் செம்மையற்ற மொத்த விற்பனை வரவு வரிவீதத்தைப் பிரயோகித்தமைக் [illegible] கான தண்டமொன்றாக இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு தொகையையும் வரிமதிப்பீட்டில் கோரப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் முழுத்தொகைக்கும் விபரத்திரட்டின்மீது செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக்கும் இடையேயுள்ள வித்தியாசத் தொகையின் இருமடங்கிற்குச் சமனான ஒரு பணத்தொகையையும் செலுத்தும்படி எழுத்தில் அந்த ஆளைக் கட்டளையிடலாம்.

## அத்தியாயம் IV

## சிறப்பு விடயங்களும் தண்டங்களும் தவறுகளும்

இயலாதவராகவுள்ள ஆளுக்காக யார் செயலாற்றலாம் என்பது.

19. எவரேனும் ஆளினால் செய்யப்படவேண்டும் என இந்நியதிச்சட்டத்தினால் அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் செயல் அல்லது காரியம், அத்தகைய ஆள் ஓர் இயலாதவராகவுள்ள ஆளின் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் செய்யப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பங்குடைமை ஒன்றின் சார்பில் முந்திய பங்காளர் செயலாற்றுதல்.

20. எவரேனும் ஆளினால் செய்யப்படவேண்டும் என இந்நியதிச்சட்டத்தினால் அல்லது இந்நியதிச்சட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் செயல் அல்லது காரியம் பங்குடைமையிலுள்ள இருவரின் அல்லது இருவருக்கு அதிகமானவர்களின் விடயத்தில், அத்தகைய பங்குடைமையின் முந்திய பங்காளரினால் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், பங்குடைமையொன்றின் முந்திய பங்காளர் எந் என்ற தன்மையில் இந்நியதிச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள், அத்தகைய பங்குடைமையில் தாம் ஒரு பங்காளர் அல்லரென அல்லது இலங்கையிலுள்ள வேறோர் ஆளே அதன் முந்திய பங்காளர் என எண்பித்தலொழிய, அவர் அப்பங்குடைமையின் முந்திய பங்காளராகவே கருதப்படுவர்.

பிரதான அலுவலர் கம்பனியொன்றின் சார்பில் அல்லது ஆட்கள் குழுவொன்றன் சார்பில் செயலாற்றுதல்.

21. (1) கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஒவ்வொரு கம்பனியினதும் அல்லது ஆட்கள் குழுவினதும் செயலாளர், முகாமையாளர், பணிப்பாளர், அல்லது வேறு பிரதான அலுவலர், அத்தகைய கம்பனியினால் அல்லது ஆட்கள் குழுவினால் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் அல்லது விடயங்களையும் செய்வதற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்:

ஆயின், கம்பனி ஒன்றின் சார்பில் அல்லது ஆட்கள் குழுவொன்றன் சார்பில் இந்நியதிச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் அறிவித்தலொன்று

வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், அக்கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லையென அல்லது இலங்கையில் வதியும் வேறோர் ஆளே அதன் பிரதான அலுவலர் என என்பித்தாலொழிய, அந்த ஆள் அதன் பிரதான அலுவலராகக் கருதப்படுவார்.

(2) கூட்டி இணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டி இணைக்கப்படாததாயினுஞ்சரி கம்பெனியொன்றினால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் இந் நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளவிடத்து, அத்தவறு புரியப்பட்ட காலத்தில் அக்கம்பெனியின் அல்லது ஆட்கள் குழுவின் செயலாளராக, முகாமையாளராக, பணிப்பாளராக அல்லது வேறு பிரதான அலுவலராக இருந்த ஒவ்வோர் ஆளும், அத்தவறு தமது அறிவுக் கெட்டாமல் புரியப்பட்டதெனவும் அத்தவறு புரியப்படுவதனைக் கருத்துட்கொண்டு எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப, அவர் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்திருக்கிறாரெனவும் என்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தொழில் இல்லா தொழியும் விடயத்தில் மொத்த விற்பனை வரவு வரியினைச் செலுத்துவதற்குள்ள பொறுப்பு.

22. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அமைய காலாண்டொன்றின்போது மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலரான ஆள் ஒருவர், எந்தத் தொழில் தொடர்பில் அவர் அத்தகைய வரி இறுக்கப்படற்பாலராக உள்ளாரோ, அந்தத் தொழில் எதனையும் கொண்டுநடாத்தாதொழிந்துள்ளாராயினும், அந்தக் காலாண்டில் அந்தத் தொழிலினை எந்தக் காலப்பகுதிக்குக் கொண்டுநடாத்தினாரோ அந்தக் காலப்பகுதிக்கென அத்தகைய வரியினைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) தொழில் ஒன்றினைக் கொண்டுநடாத்துபவரான எவரேனும் ஆள், அத்தகைய தொழிலினை வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றுமிடத்து, கைமாற்றுகைக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கென, அத்தகைய தொழில் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி, கைமாற்றுபவரிடமிருந்து அறவிடப்படமுடியாததாக இருந்தால், கைமாற்றம் பெறுபவரின்மீது ஒரு வரிமதிப்பீடு செய்யப்படாதிருப்பினும் கைமாற்றம் பெறுபவரிடமிருந்து அறவிடப்படலாம் என்பதுடன், மொத்த விற்பனை வரவு வரியினைச் சேகரித்தலும் அல்லது இறுத்தலும

பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

மொத்த விற்பனை வரவு வரிசெலுத்துவதற்கு நிறைவேற்றுநருக்குள்ள பொறுப்பு.

23.(1) மொத்த விற்பனை வரவு இறுக்கப்படற்பாலரான எவரேனும் ஆள் இறக்குமிடத்து, அத்தகைய இறக்குநாள் நிறைவேற்றுநர், அத்தகைய ஆள் இறந்த தேதிக்கு முன்னருள்ள எல்லாக் காலப்பகுதிகள் தொடர்பிலும் அந்த ஆள் உயிரோடு இருந்திருந்தால் அத்தகைய ஆளிடமிருந்து, இறுக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் உயிரோடு இருந்திருந்தால், இந்நியதிச்சட்டத்தின்கீழ் செய்வதற்கு ஆளாகவிருந்திருக்கும் எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கு அவர் ஆளாதலும் வேண்டும்:

ஆயின் -

(அ) இறந்த ஆளினையேதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில் நிறைவேற்றுநருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது;

(ஆ) அத்தகைய ஆள், இறந்த தேதிக்கு முன்னருள்ள ஒரு காலப்பகுதி தொடர்பிலான வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரி மதிப்பீடு எதுவும், இறப்பு எக்காலாண்டின்போது சம்பவித்ததோ அக்காலாண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் செய்யப்படுதல் ஆகாது; அத்துடன்

(இ) இப்பிரிவின்கீழ் நிறைவேற்றுநருக்குள்ள பொறுப்பானது -

(i) இப்பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரிக்கான பொறுப்பு ஏற்படும் என்ற அறிவித்தல் அவருக்குக் கொடுக்கப்பட்டதான தேதியில் அவரது உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டிலுள்ள இறந்த ஆளின் மரணச்சொத்து; அத்துடன்

(ii) பயன்பெறுநர் ஒருவருக்குச் சென்றடையக்கூடியதான மரணச்சொத்தின் ஏதேனும் பாகம்,

என்பனவற்றிற்கான பணத்தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) இறந்த ஆள் ஒருவரின் மரணச்சொத்தின் சார்பில் நிறைவேற்றுநர் ஒருவர் அத்தகைய மரணச்சொத்தின் ஒரு பாகமாகவுள்ள ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துமிடத்து, அத்தகைய நிறைவேற்றுநர் அத்தகைய தொழில் தொடர்பில், அத்தகைய ஆள் உயிரோடு இருந்திருந்தால் அவரிடமிருந்து இறுக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராவர்.

தமக்குச் சொந்தமாயில்லாததான தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி செலுத்துவதற்கு குறித்த சில ஆட்களுக்குள்ள பொறுப்பு.

24. எந்தத் தொழில் தொடர்பில் மொத்த விற்பனை வரவு வரி செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்தத் தொழில் எவரேனும் ஆளினால், வேறு எவரேனும் ஆளின் சார்பில், அத்தகைய வேறு ஆளின் முகவர் என்ற வகையில் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அந்தத் தொழில் தொடர்பில் பின்னர் கூறப்பட்ட ஆளிடமிருந்து இந்நியதிச்சட்டத்தின்கீழ் வரி இறுக்கப்படற்பாலதாகவிருக்கும் அதே முறையிலும் அதே தொகைக்கும் முதற்கூறப்பட்ட ஆள் மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலராதல் வேண்டும்.

கூட்டு முகவர்களும், நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் நிறைவேற்றுநர்களும்.

25. இரு ஆட்கள் அல்லது இருவருக்கு அதிகமான ஆட்கள் நம்பிக்கைப் பொறுப்பொன்றன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற தன்மையில் அல்லது இறந்த ஆள் ஒருவரின் மரணச்சொத்தின் நிறைவேற்றுநர்கள் என்ற தன்மையில் செயலாற்றுமிடத்து, இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவர்களிடமிருந்து, இறுக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி, கூட்டாகவும், தனித்தனியாகவும் அவர்களிடமிருந்து இறுக்கப்படலாம் என்பதுடன், அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் அத்தகைய வரியினைச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

கம்பெனியொன்றின் ஒழித்துக் கட்டுதலின்மீது அல்லது ஆட்கள் குழுவொன்றின் கலைத்தலின் மீது மொத்த விற்பனை வரவு வரி செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள்.

26. (1) கம்பெனிகள் கட்டளைச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், கம்பெனியொன்று ஒடுக்கப்படுமிடத்தும், அத்துடன் அக்கம்பெனி செலுத்துவதற்கு ஆளாகும் ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்பட முடியாததாயிருக்குமிடத்தும், அப்போது அத்தகைய வரி எந்தக் காலப் பகுதி தொடர்பில் இறுக்கப்படுகின்றதோ, அந்தக் காலப்பகுதியின்போது தொடர்பில் இறுக்கப்படுகின்றதோ, அந்தக் காலப்பகுதியின்போது எந் நேரத்திலேனும் கம்பெனியின் பணிப்பாளராகவிருந்த ஒவ்வோராளும் வரி செலுத்துவதில் தவணை தவறியமை, கம்பெனியின் அலுவல்கள் தொடர்பாக அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிக்க அசட்டைக்கு பிறழ்செயலுக்கு அல்லது கடமை மீறுகைக்கு ஏற்றிக்கூறமுடியாதென்பதனை எண்பித்தாலன்றி, அத்தகைய வரிக்கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன், மொத்த விற்பனை வரவு வரியின் சேகரிப்பும் அறவிடும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(2) ஆட்கள் குழுவொன்று கலைக்கப்படுமிடத்தும், அத்துடன் அக்குழு செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்படமுடியாததாயிருக்குமிடத்தும், அப்போது, அத்தகைய வரி எக் காலப்பகுதி தொடர்பில் இறுக்கப்படுகின்றதோ அக்காலப்பகுதியின்போது அந்த ஆட்கள் குழுவின் உறுப்பினரொருவராகவிருந்த ஒவ்வோராளும், வரி செலுத்துவதில் தவணைதவறியமை கம்பெனியின் அலுவல்கள் தொடர்பாக அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிக்க அசட்டைக்கு, பிறழ்செயலுக்கு அல்லது கடமை மீறுகைக்கு ஏற்றிக்கூறமுடியாதென்பதனை எண்பித்தாலன்றி, அத்தகைய வரிக்கொடுப்பனவுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும் என்பதுடன், மொத்த விற்பனை வரவு வரியின் சேகரிப்பும் அறவிடும் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாத லும் வேண்டும்.

(3) எவரேனுமாயினும் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரித்தொகையைக் குறைக்கும் அல்லது குறைக்கும் பயனைக் கொண்டதாகவிருக்கும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கையுதிர்ப்பு செயற்கையானது அல்லது கற்பனையானது என்றும் ஏதேனும் கொடுக்கல்

வாங்கலுக்கு அல்லது கையுதிர்ப்புக்கு உண்மையில் பயன்கொடுக்கப்பட வில்லை என்றும் வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது கையுதிர்ப்பைப் புறக்கணித்து அதற்கிணங்க அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்கான அல்லது கையுதிர்ப்புக்கான திறத்தவர்களை வரிமதிப்பீடு செய்யலாம்.

இப்பிரிவில், "கையுதிர்ப்பு" என்பது, ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பை, மானியக்கொடையை, உடன்பாட்டை, உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்கும்.

வரிமதிப்பீட்டின் செல்லுபடியாந் தன்மை.

27. (1) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருப்பதாகக் கொள்ளப்படுவதான அறிவித்தல் வரிமதிப்பீடு, சான்றிதழ் அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும் இந்நியதிச்சட்டத்தின் முன்னத்துக்கும் கருத்துக்கும் இயையவும் அல்லது அதற்கிணங்கவும் பொருளிலும் பயனிலும் இருப்பதாயின், அத்துடன் வரிமதிப்பீடு செய்யப்பட்ட ஆள், அல்லது வரிமதிப்பீடு செய்யப்பட முன்னப்பட்ட ஆள் அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள், பொதுவான முன்னத்துக்கும் விளக்கத்துக்கும் இணங்க, அதில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின், படிவமுறையில் குறைபாடுள்ளதென்பதற்காகப் பயனுறுத்தப்படுதல் அல்லது வறிதாகவோ வறிதானதாக்கப்படற்பாலதாகவோ கருதப்படுதல் ஆகாது அல்லது அதன்கண் உள்ள பிழை, குறைபாடு அல்லது விட்டுவிடுகை காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலானது வரி இறுக்கப்படமுன்னப்பட்டுள்ளவரான ஆளிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாயும், பொருளிலும் பயனிலும் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட விவரங்களை உள்ளடக்கியதாயும் இருப்பின் –

(அ) வரி இறுக்கப்படற்பாலரான ஆளின் பெயர் அல்லது சொந்தப் பெயர் தொடர்பில் மொத்த விற்பனை வரவுத்தொகை தொடர்பில் அல்லது இறுக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரித்தொகை தொடர்பில் அதன்கண் உள்ள பிழை ஒன்றன் காரணத்தால், அல்லது

(ஆ) வாமதிப்பீட்டிற்கும் அதுபற்றிய அறிவித்தலுக்கும் இடையே யுள்ள ஏதேனும் வேறுபாட்டின் காரணத்தால்,

வாமதிப்பீடு எதுவும் பாதிக்கப்படுதலோ அல்லது கேள்விக்குட்படுத்தப்படுதலோ ஆகாது.

கட்டிடங்களில் அல்லது இடங்களில் தேடுதல் செய்வதற்குள்ள தத்துவம்.

28. (1) மாகாண ஆணையாளரால் அதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டவரான மாகாண பகிரங்கசேவையிலுள்ள அலுவலர் எவரும் சமாதான அலுவலர் ஒருவர் உடன்றுக்கு பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்—

(அ) அவரது அபிப்பிராயப்படி, இந்நியதிச்சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கைகள் எவற்றிற்கும் பயன்படும் அல்லது இவை பாலவை யாகும் எவையேனும் கணக்குப்புத்தகங்கள், இடாப்புகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எந்தக் கட்டிடத்தில் அல்லது இடத்தில் காணப்படக்கூடுமென நம்புவதற்கு அவருக்குக் காரணமுண்டோ அந்தக் கட்டிடத்தினுள் அல்லது இடத்தினுள் சென்று, அதில் தேடுதல் செய்யலாம் என்பதுடன், அவ்வாறு காணப்படின் அவற்றைப் பரிசோதனையும் செய்யலாம்;

(ஆ) அத்தகைய கணக்குப்புத்தகங்களை, இடாப்புகளை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கைப்பற்றலாம் அல்லது அவற்றின்மீது அடையாளங்காட்டும் குறிகளை இடலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களையோ அல்லது பிரதிகளையோ எடுக்கலாம்;

(இ) அவரது அபிப்பிராயப்படி இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்குப் பயன்படுவதும் அல்லது இவை பாலதும், இப்பிரிவின்கீழான ஏதேனும் தேடுதலின்போது கண்டெடுக்கப்பட்டதுமான வேறேதேனும் பொருள்பற்றிக் குறிப்பெடுக்கலாம் அல்லது பொருட்பட்டியல் தயாரிக்கலாம்.

அத்துடன், தேடுதல் பற்றிய 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழான தேடுதல்களுக்கு

அத்துணை அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். இவ்வுட்பிரிவில் "சமாதான அலுவலர்" என்பது 1979ஆம் ஆண்டின்

(2) ஒராமுட்பிரிவின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிக்குமாறு எவரேனும் ஆளுக்கு அதிகாரமளிக்குமுன்னர், மாகாண ஆணையாளர் அவ்வலுவலரால் அத்தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதை அவசியமாக்குகின்ற சூழ்நிலைகளைப் பதிதல் வேண்டும்.

புத்தகத்தை இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கைப்பற்றுமிடத்து, அத்தகைய அலுவலர், தம்மால் கைப்பற்றப்பட்ட புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் குறித்துரைக்கும் குறிப்பறிக்கையொன்றை அவ்வாளுக்கு வழங்குதல் வேண்டும்.

(4) ஒராமுட்பிரிவின்கீழ் எவரேனும் அலுவலரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கணக்குப்புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம், அத்தகைய புத்தகத்தின் இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் கணக்காய்வுக்கு அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு, அல்லது வேறு ஆவணம் எந்த ஆளுக்குரியதோ அந்த ஆளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் தொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான காலம்வரை அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

தொழில் வளவுகளை தேடுதல் செய்வதற்குள்ள தத்துவம்.

29. (1) மாகாண ஆணையாளர் அல்லது மாகாண ஆணையாளரினால் அதற்கென எழுத்தில் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட மாகாண பகிரங்க சேவையிலுள்ள வேறு எவரேனும் அலுவலர், பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் செய்யலாம்–

(அ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்கென, எவரேனும் ஆளினால் ஏதேனும் தொழில் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் இடத்தினுள் அல்லது கட்டிடத்தினுள் சென்று சோதனையிடலாம்;

(ஆ) ஏதேனும் கணக்குப்புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஏதேனும் ஆவணம் காணப்படக்கூடிய ஏதேனும் கொள்கலனைத் திறந்து பரிசோதனை செய்யலாம் என்பதுடன், அதன்கண் காணப்பட்ட பொருள்களுள் எவற்றினதும் பொருட்பட்டியலொன்றைத் தயாரிக்கலாம்.

(இ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் அவற்றின் பிரதிகளையும் எடுக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களையும் எடுக்கலாம்.

(ஈ) ஏதேனும் கணக்குப்புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை உடைமையிலெடுக்கலாம் அல்லது அதன்மீது அடையாளங்காட்டும் குறிகளை இடலாம்.

(உ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்பட்ட காசை எண்ணி, உடனடியாக அதனைப் பதிந்துகொள்ளலாம்,

(ஊ) அவர் அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணும் ஆளெவரையும் இந்நியதிச்சட்டத்தின்கீழான கருமங்கள் தொடர்பில் அவரது தத்துவத்திலுள்ளவாறான அத்தகைய தகவலைக் கொடுக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஒராமுட்பிரிவின்கீழ் மாகாண ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைத் தமது உடைமையில் எடுக்குமிடத்து, அத்தகைய அலுவலர், தமது உடைமையில் எடுத்துள்ள புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தைக் குறித்துரைக்கும் குறிப்பறிக்கையொன்றை அவ்வா_க்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின்கீழ் எவரேனும் அலுவலரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கணக்குப்புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் அத்தகைய புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது வேறு ஆவணத்தின் நுணித்தாய்வுக்கு அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எந்த ஆளுக்குரியதோ அந்த ஆளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை தொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான காலம்வரை அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

மொத்த விற்பனைவரவு வரி இறுக்கப்படற்பாலதான ஒவ்வோர் ஆளாலும் உறுதிச்சீட்டு தயாரித்து வழங்கப்பட வேண்டும்.

30. மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலதான ஒவ்வோராளும் தமது தொழிலைக் கொண்டு நடாத்துவதில் தம்மால் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் பின்வருவனவற்றைத் தருகின்ற உறுதிச்சீட்டொன்றைத் தயாரித்தல் அல்லது தயாரிப்பித்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்ட தேதி;

(ஆ) அத்தகைய கொடுக்கல் வாங்கலின் தன்மை;

(இ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான பணத்தொகை; அத்துடன்

(ஈ) அத்தகைய கொடுக்கல் வாங்கல் எந்த ஆளுடன் செய்துகொள்ளப்பட்டதோ அந்த ஆளின் பெயரும் முகவரியும்,

அத்தகைய உறுதிச்சீட்டின் மூலப்பிரதி, அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளப்பட்டஆளுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுதிச்சீட்டின் பிரதி அத்தகைய உறுதிச்சீட்டு எந்த ஆளினால் அல்லது எந்த ஆளின் சார்பில் தயாரிக்கப்பட்டதோ அந்த ஆளினால் எந்தக் காலாண்டில் அத்தகைய உறுதிச்சீட்டுத் தயாரிக்கப்பட்டதோ அந்தக் காலாண்டு முடிவடைந்தபின்னர் ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்பட்டு, பேணிக் காக்கப்படுதலும் வேண்டும். இப்பிரிவில் எது எவ்வாறிருப்பினும் மாகாண ஆணையாளர் வெவ்வேறு தொழிலில் கொடுக்கல் வாங்கல்கள் பதிவுசெய்யப்படவேண்டிய படிவத்தையும் முறையையும் விதித்துரைக்கலாம்.

கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இடாப்பு.

31.(1) மொத்த விற்பனை வரவு வரி இறுக்கப்படற்பாலதான ஒவ்வோராளும் தமது தொழிலைக்கொண்டு நடாத்துவதில் தம்மால் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், ஒவ்வொரு காலாண்டு தொடர்பிலும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் காலாண்டு தொடர்பில் எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய இடாப்பு அக் காலாண்டு முடிவடைந்தபின்னர் ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரால் வைத்திருக்கப்பட்டுப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

இரகசியத்தை மீறுதலும் வேறு கருமங்களும் தவறுகளாதல்.

32. (அ) 102ஆம் பிரிவின்கீழ் இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கான சத்தியத்தைச் செய்துகொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டிருக்கும் ஆள் ஒருவராக இருந்து அத்தகைய சத்தியத்தைச் செய்துகொள்ளாது இந்நியதிச்சட்டத்தின்கீழ் செயலாற்றுகின்ற; அல்லது

(ஆ) 102ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற; அல்லது

(இ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் ஆளுக்கு உதவிபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற அல்லது அந்த ஆளைத் தூண்டுகின்ற,

ஒவ்வோராளும், இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

மோசடி தொடர்பான தண்டனை வேறுபாடுகள்.

33. (அ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கேட்கப்பட்ட அல்லது தகவல் பற்றிச் செய்யப்பட்ட வினவுக்கு ஏதேனும் வேண்டுகோளுக்கு வாய்மொழி மூலமாயினுஞ்சரி எழுத்து மூலமாயினுஞ்சரி ஏதேனும் பொய்யான விடை அளிக்கின்றவரும்; அல்லது

(ஆ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டின் அவர் உள்ளடக்கியிருக்கவேண்டிய

விபரங்களை அத்தகைய விபரத்திரட்டில் சேர்க்காது விடுகின்றவரும்;

(இ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பொய்யான விவரத்திரட்டைத் தயாரிக்கின்றவரும் அல்லது ஏதேனும் விவரத்திரட்டில் பொய்யான பதிவீட்டைச் செய்கின்றவரும்,

அதன்மூலம் மொத்த விற்பனை வரவு வரியைத் தட்டிக்கழிக்கின்றவரும் அல்லது தட்டிக்கழிக்க எத்தனிக்கின்றவரும் அல்லது அத்தகைய வரியைத் தட்டிக்கழிப்பதற்கு அல்லது தட்டிக்கழிக்க எத்தனிப்பதற்கு வேறு எவரேனும் ஆளுக்கு உதவுகின்றவருமான எவரேனும் ஆள், இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றந்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்-

(i) அத்தவறு எந்தக் காலாண்டு தொடர்பில் புரியப்பட்டதோ அந்தக் காலாண்டின்போது விடயத்திற்கேற்றற்போன்று, அவர் அல்லது அவ்வாறு உதவப்பட்ட வேறு ஆள் இந்நியதிச் சட்டத்தின்கீழ் கொடுப்பதற்கு ஆளாகவுள்ள எந்த வரித் தொகையை அவ்வாறு தட்டிக்கழித்தாரோ அல்லது தட்டிக் கழிக்க எத்தனித்தாரோ அந்த வரித்தொகையின் இரு மடங்கிற்குச் சமமானதொரு பணத்தொகையைக் கொண்டுள்ள குற்றப்பணத்திற்கும்; அத்துடன்

(ii) ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகையைக் கொண்டுள்ள குற்றப் பணத்திற்கும் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கு இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும்,

ஆளாதலும் வேண்டும்.

34. (அ) பத்தாம்பிரிவின் அல்லது 30ஆம் பிரிவின் அல்லது 31ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற;

அல்லது

(ஆ) பத்தாம் பிரிவின்கீழ் அல்லது 79ஆம் பிரிவின்கீழ், வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(இ) பத்தாம் பிரிவின் கீழ் அல்லது 79ஆம் பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றிற்கிணங்க மாகாண உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் முன்னிலையில் தோன்றியிருந்து, அவரிடம் அத்தகைய அலுவலரால் சட்டமுறையாகக் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்குப் போதிய காரணமின்றி விடையளிக்கத் தவறுகின்ற; அல்லது

(ஈ) மொத்த விற்பனை வரவு வரிக்கான அவரது சொந்தப் பொறுப்பை மேலது வேறு எவரேனுமாளின் பொறுப்பைப் பாதிக்கின்ற ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பாக ஏதேனும் செம்மையற்ற தகவலைக் கொடுக்கின்ற

அல்லது

(உ) ஆணையாளர் அல்லது வேறு எவரேனும் அலுவலர் 28ஆம் பிரிவின்கீழ் அல்லது 29ஆம் பிரிவின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவருக்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை விடுக்கின்ற அல்லது அவரைத் தாமதப்படுத்துகின்ற; அல்லது

(ஊ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றும்படி வேறு எவரேனும் ஆளுக்கு உதவிபுரிகின்ற உடந்தையாயிருக்கின்ற அல்லது அந்த ஆளைத் தூண்டுகின்ற,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கு, இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறுகளை இணக்குதல்.

35. மாகாண ஆணையாளர் 32ஆம் பிரிவின்கீழான அல்லது 33ஆம் பிரிவின்கீழான அல்லது 34ஆம் பிரிவின்கீழான ஏதேனும் தவறை இணக்கலாம் என்பதுடன், தீர்ப்புக்குமுன்னர், அதன்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைக்கலாம் அல்லது இணக்கலாம்.

குற்றவழக்குத் தொடுப்புகள் ஆணையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளப் படவேண்டும்.

36. மாகாண ஆணையாளர் தூண்டுதலின்பேரிலன்றி, அல்லது அவரது அனுமதியுடனன்றி 32ஆம் பிரிவின்கீழ் அல்லது 33ஆம் பிரிவின் கீழான தவறொன்று தொடர்பில் குற்றவழக்குத் தொடுப்பு எதுவும் தொடங்கப்படுதலாகாது.

## பாகம் 2

## அத்தியாயம் X

## முத்திரைத் தீர்வை விதித்தல்

தீர்வை விதிக்கப்படற்பாலனவான சாதனங்கள்.

37. பின்வருவனவற்றின்மீது, அதாவது -

(அ) ................மாகாணத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பிலான சாதனம் ஒவ்வொன்றின்மீதும்;

(ஆ) இலங்கையின் ................மாகாணத்தின் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணம் ஒவ்வொன்றின்மீதும்;

(இ) ..............மாகாணத்தில் பயனுறுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றன் கைமாற்றம் ஒவ்வொன்றின்மீதும்,

விதித்துரைக்கப்பட்ட வீதத்தில் முத்திரைத் தீர்வையொன்று விதிக்கப்படுதல் வேண்டும். வெவ்வேறு வகுப்புகளை அல்லது வகைகளைச் சேர்ந்த சாதனங்கள் தொடர்பில் வெவ்வேறான தீர்வை வீதங்கள் விதித்துரைக்கப்படலாம்.

பல்வேறு தனி வேறான கருமங்கள் தொடர்பிலான சாதனங்கள்.

38. பல்வேறு தனிவேறான கருமங்களைக்கொண்ட அல்லது அவை தொடர்பிலான ஏதேனும் சாதனத்திற்கு அத்தகைய கருமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி சாதனத்திலுல் கையாளப்பட்டிருப்பின், விதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதான மொத்த முத்திரைத் தீர்வைத் தொகை விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

அத்தியாயம் XI

விலக்களிப்புகள்

விலக்களிப்புக்கள்.

39. பின்வரும் சாதனங்களும் ஆவணங்களும் முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்:-

(1) குற்றவியல் நடவடிக்கைகளிலான பிணைமுறி;

(2) அரசாங்கத்திலுல் அல்லது அரசாங்கத்துக்காக அல்லது அதன் சார்பில் ஆணையாளராலும் செய்யப்படும் உரிந்துமாற்றம் அல்லது கைமாற்றம்;

(3) இந்த விலக்களிப்பில்லாவிடின் அத்தகைய சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான தீர்வையைச் செலுத்துவதற்கு அரசாங்கம் ஆளாகும் விடயத்தில் அரசாங்கத்தினுல் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்பட்டுள்ள சாதனம்;

(4) எந்த நாடு தொடர்பில், 76 (2)ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கின்றதோ அந்த ஒரு நாடாகவுள்ள ஏதேனும் நாட்டின் அரசாங்கத்தினுல், அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் சாதனம்;

(5) சட்ட நடவடிக்கைகளில் கோப்படப்படும் பின்வரும் ஆவணங்கள் –

(அ) நீதிவான் நீதிமன்றங்களிலும், ஆரம்ப நீதிமன்றங்களிலும் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும், அத்துடன் குற்ற

வியல் நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும்;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தில், அத்தகைய நீதிமன்றத்தின் ஏதேனும் நடவடிக்கைகளில் பதவி சார்பில் வழக்குத் தொடரும் அல்லது அவருக்கெதிராக வழக்குத் தொடரப்படும் அல்லது இடைவரும் பகிரங்க அலுவலர்களால் கோப்பிடப்படும் ஆவணங்கள்;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் நடவடிக்கையில் நொடித்தவர் ஒருவராக வழக்குத் தொடருவதற்கு, எதிர்வாதம் கூறுவதற்கு அல்லது இடைவருவதற்கு உரியமுறையில் அனுமதிக்கப்பட்ட ஆளொருவரால் அத்தகைய நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் ஆவணங்கள்;

(ஈ) — (ஏ) — Skip —

(6) இறுதி விருப்பாவணம், மரணசாதனம் அல்லது இறுதி விருப்பாவணம் பின்னிணைப்பு அது நொத்தாரிசுமூலமாக அத்தாட்சிப்படுத்தப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலானதாயினுஞ் சரி.

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்திலுல் கடனிறுக்க வகையற்றவராக வெளிப்படுத்தப்படுவதற்கென விண்ணப்பிக்கும் ஆளொருவராக அத்தகைய நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் ஆவணங்கள்;

(உ) ஆட்கொணர்வெழுத்தாணை என்ற தன்மைத்தான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றன் நோக்கங்களுக்கென ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்கள்,

(ஊ) ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட பிரேரணைகள்;

(எ) ஏதேனும் நீதிமன்றத்திலுல், விண்ணப்பத்தின்மீதாயினுஞ்சரி, அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீதாயினுஞ்சரி, வழங்கப்படும் எழுத்தாணைகள்;

அத்தியாயம் XII

முத்திரையிடும் நேரமும் முறையும்

முத்திரைத் தீர்வையைச் செலுத்தும் நேரமும் முறையும்.

40.(1) ஏதேனும் சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, சாதனம் எழுதி நிறைவேற்றப்படுமுன்னரோ அல்லது நிறைவேற்றப்படும் நேரத்திலோ செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கொடுப்பனவு, இந்நியதிச்சட்டத்தில் வேறுவகையாக அனுமதிக்கப் பட்டிருந்தாலன்றி, ஒட்டு முத்திரை அல்லது பொறித்திட்ட முத்திரை என்ற வகையாக அத்தகைய சாதனத்தின்மீது சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும். அல்லது இதன் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுச் சான்றாக இருத்தல் வேண்டும்.

(2) அசைவற்ற ஆதனமொன்றின் கைமாற்றம் தொடர்பிலான ஒரு சாதனத்தின்மீது கொடுபடற்பாலதான முத்திரைத்தீர்வை வரைந்துரைக்கப்பட்ட வங்கியொன்றுக்குச் செலுத்தப்படலாம். அவ்வங்கி செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைத் தொகை கொடுக்கப்பட்டதென்பதையும் அவ்வங்கி அத்தகைய தீர்வையின் கொடுப்பனவுத் தேதியையும் கொண்ட வரைந்துரைக்கப்பட்ட படிவத்திலான சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். அதன் சார்பில் வங்கியினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழ் அத்தகைய சாதனத்தில் ஒட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், தீர்வையைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்தினால் சாதனம் நிறைவேற்றப்படுமுன்னர் அல்லது நிறைவேற்றப்படும் நேரத்தில் வங்கிக்கு அத்தகைய கொடுப்பனவைச் செய்யமுடியாதவிடத்து, அத்தகைய தீர்வையானது அச்சாதனம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்கு மேற்படாத அத்தகைய காலத்துள் செலுத்தப்படுதல் வேண்டும். ஆயின், அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற ~~அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், சாதனத்தை அத்தாட்சிப்படுத்து~~ நொத்தாரிசு அதற்கான காரணங்களை உறுதியில் சான்றுப்படுத்துதல் வேண்டும். அதன்மீது முத்திரைத் தீர்வுக் கொடுப்பனவுக்கான சான்றிதழொன்று ஒட்டப்பட்டதான சான்றிதழொன்று முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒட்டு முத்திரைகளை அல்லது பொறித்திட்ட முத்திரைகளைப் பயன்படுத்துவது இயலாததாயிருக்குமிடத்து, அல்லது மேற்சொல்லப்பட்டவாறு வங்கிக்குக் கொடுப்பனவு செய்யமுடியாதிருக்குமிடத்து, ஆணையாளர் அத்தகைய சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வைக்குச் சமமான ஒரு தொகை அவருக்குச் செலுத்தப்படுவதன்மீது, செலுத்தப்பட்ட தொகையையும் அத்தகைய தீர்வை செலுத்தப்பட்ட தேதியையும், சாதனத்தின்மீது புறக்குறிப்பிடலாம். அவ்வாறு புறக்குறிப்பிடப்பட்ட சாதனமொன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒட்டு முத்திரைகளைப் பொறித்தல்.

41.(1) சாதனமொன்றுக்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு, ஒட்டு முத்திரையின் வாயிலாகச் சுட்டிக்காட்டப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தை எழுதிநிறைவேற்றும் ஆள் அல்லது ஆட்களுள் ஒருவர் அம்முத்திரை மீண்டும் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காதவாறு அதன் குறுக்கே அவரது பெயரையும் முதலெழுத்துக்களையும் மையினால் எழுதுவதன்மூலம் அம்முத்திரையைப் பெறுமதி ஒழித்தல் வேண்டும்.

(2) சாதனமொன்று ஐம்பது ரூபாப் பெறுமதியுடைய அல்லது அதற்குக் கூடுதலான பெறுமதியையுடைய ஒட்டு முத்திரையொன்றையும் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய முத்திரையானது, (1)ஆம் உட்பிரிவினால் குறிப்பீடு செய்யப்பட்ட எழுதலுடன் மேலதிகமாக, ஒரு புழையால், துளையால், துளைக் கருவியால் அல்லது குறட்டினால் வெட்டி பெறுமதியழிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம், (2)ஆம் உட்பிரிவுகளில் தரப்பட்டுள்ள முறையில் பெறுமதியழிக்கப்பட்டில்லாத ஒட்டு முத்திரையைக் கொண்டிருக்கும் ஏதேனும் சாதனம், அம்முத்திரையினது பெறுமதியின் அளவுக்கு முத்திரையிடப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIII

### குறித்த சில சாதனங்களுக்கு எவ்வாறு முத்திரையிடப்படவேண்டும் என்பது.

முத்திரையிடப்பட்ட கடதாசியொன்றில் ஒரு சாதனம் மட்டுமே இருத்தல் வேண்டும்.

42. முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதான இரண்டாவது சாதனம் எதுவும், தீர்வை அறவிடப்படற்பாலதான சாதனமொன்று எந்த முத்திரையிடப்பட்ட கடதாசியின்மீது ஏற்கனவே எழுதப்பட்டுள்ளதோ அந்த முத்திரையிடப்பட்ட கடதாசியில் எழுதப்படுதல் ஆகாது:

ஆயினும், ஏதேனும் சாதனத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் உரிமையைக் கைமாற்றும் நோக்கத்துக்கென அல்லது எந்தப் பணத்தின் கொடுப்பனவுக்கு அல்லது பொருளின் ஒப்படைப்புக்கு ஏதேனும் சாதனத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது பொருளைப் பெற்றுக்கொண்டமை பற்றி ஒப்புக்கொள்வதற்கென அல்லது ஒரு மாற்றுண்டியலின் அல்லது வாக்குறுதிப்பத்திரின் கொடுப்பனவுக் கொடுத்தலை விடுப்பதற்கென முறையாக முத்திரையிடப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பை இப்பிரிவில் உள்ளதெதுவும் தடுத்தலாகாது.

பரிமாற்ற ஊலப் பயனுறுத்தும் சாதனங்கள் எப்படி முத்திரையிடப்படுதல் ' வேண்டும் என்பது.

43. ஆதனப் பரிமாற்றமொன்றைப் பயனுறுத்துவதற்குப் பல்வேறு உரித்துமாற்றுச் சாதனங்கள் அல்லது கைமாற்றுச் சாதனங்கள் இருக்குமிடத்து, முதலாவதாக எழுதிநிறைவேற்றப்படும் சாதனம் அத்தகைய பரிமாற்றத்துக்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத்தீர்வை ஏதேனுமிருப்பின், அம்முத்திரைத் தீர்வைகொண்டு முத்திரையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், வேறு எல்லாச் சாதனங்களும் ஐந்து ரூபா முத்திரைத் தீர்வைகொண்டு முத்திரையிடப்படுதலும் வேண்டும்:

ஆயினும், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் முதலாவது சாதனம் எழுதிநிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றின் பின்னர் எழுதிநிறைவேற்றப்படும் அத்தகைய ஏதேனும் அடுத்துள சாதனத்திற்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

சட்ட நடவடிக்கைகளிலான ஆவணங்கள்.

44. ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்டுள்ளதும் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதுமான ஒவ்வோர் ஆவணத்தின்மீதும் செலுத்தப்படற்பாலதான தகுந்த தீர்வை, அத்தகைய ஆவணங்களின் நிரலில் ஒட்டப்பட்டும் இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள முறையில் பெறுமதி குறிக்கப்பட்டும் இருப்பின், அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றும் உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருக்கும்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்த சில சாதனங்களில் இணைப்பிரதிகளுக்கு முத்திரையிடுதல்.

45. முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான, ஏதேனும் சாதனம், பிரசித்த நொத்தாரிசு ஒருவர் முன்னிலையில் அல்லது பிசுக்கால் ஒருவர் முன்னிலையில் அவரது பதவியினை நிறைவேற்றுகையில் எழுதி நிறைவேற்றப்படுமிடத்து, அல்லது ஒப்புக்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தின்மீது விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை, மூலச் சாதனத்தின்மீது விதிக்கப்படற்பாலதற்குப் பதிலாக அதன் இணைப்பிரதியின்மீதோ அல்லது அடியிதழின்மீதோ விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும், அத்துடன் மூலச் சாதனம் ஒரு ரூபா முத்திரையொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

## அத்தியாயம் XIV

## முத்திரைத் தீர்வைக் கூட்டு

செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வைக்கூட்டு.

46. (1) ஆணையாளர் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் நடவடிக்கையில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத்தீர்வையின் கொடுப்பனவுக்கென பின்வரும் நிபந்தனைகளின்மீது ஒத்திணங்குவதற்கு அத்தகைய நீதிமன்ற அலுவலரை அதிகாரமளிக்கலாம்: அந்நிபந்தனைகளாவன:-

(i) அத்தகைய அலுவலர் அந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்டஆவணங்களின் பதிவேடுகளைப் பேணுவார்;

(ii) அத்தகைய அலுவலர் ஆணையாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளின் முடிவில் விடயத்துக்கேற்றற்போல, பின்வருவனவற்றின்மீது கொடுபடற்பாலதான முத்திரைத் தீர்வையின் கூட்டுமொத்தத் தொகையை ஆணையாளருக்கு அனுப்பிவைப்பார்:

(அ) அந்த அலுவலர் எந்த நீதிமன்றத்துக்குநியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்கள்;

(ஆ) அத்தகைய காலப்பகுதியின்போது அத்தகைய வேறு ஆளினால் வழங்கப்பட்டசாதனங்கள்.

(2) சட்டத்தால் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணம் ஒன்றின்மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத்தீர்வைக் கொடுப்பனவு இப்பிரிவிற்கிணங்க ஒத்திவைக்கப்பட்டுள்ளவிடத்து, (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய நீதிமன்றத்தின் அலுவலர், அத்தகைய ஆவணத்தின்மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வைத் தொகையையும், அத்தகைய முத்திரைத்

தீர்வைக் கொடுப்பனவு இப்பிரிவிற்கிணங்க ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதையும் அத்தகைய ஆவணத்தின்மீது புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

(3) சாதனமொன்றுக்கு அல்லது ஆவணமொன்றுக்கு விதிக்கப்படற் பாலதான முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு மேலே சொல்லப்பட்டவாறு ஒத்திவைக்கப்பட்டிருப்பினும், அத்தகைய சாதனம் அல்லது ஆவணம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தகுந்த தீர்வையின்மீது ஆணையாளர் தீர்த்தளிக் கலாம்.

## அத்தியாயம் XV

### சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்ட ஆவணங்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்

தொடர்ச்சிகளின் பெறுமானம்.

47.(1)(அ) சட்டங்கள் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்படும் எவையேனும் குடியியல் நடவடிக்கைகளில்; அல்லது

(ஆ) மேல் நீதிமன்றத்தில் தொடரப்படும் எவையேனும் கடலாண்மை நடவடிக்கைகளில்,

முன்வைக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணங்களின்மீது செலுத்தப்படற் பாலதான முத்திரைத் தீர்வையைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்கென, அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் பெறுமதியானது, இதில் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலன்றி—

(I) வழக்கு நடவடிக்கைகளில் உரிமைகோரப்படும் நயசியின், கோரிக்கையின் அல்லது தேசஈட்டின் தொகையாதல் வேண்டும்;

(II) வழக்கு நடவடிக்கையானது காணிமீதான உரிமை, உரித்

(III) மரணமெய்திய ஆளின் மரணச்சொத்துத் தொடர்பில் மரணசாதன அதிகாரப்பத்திரத்துக்கான அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரத்துக்கான விண்ணப்பங்களின் விடயத்தில் மரணச்சொத்தின் தேறிய பெறுமதியாதல் வேண்டும்.

## அத்தியாயம் XVI

### முத்திரைத் தீர்வைக்கான பெறுமதி மதிப்பு

முத்திரைத் தீர்வைக்கான பெறுமதி மதிப்பு.

48. (1) ஏதேனும் ஆதனம், சாதனமொன்றின்மூலமாக உரித்துமாற்றப்படுமிடத்து, அத்தகைய சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத்தீர்வை உரித்துமாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியின்மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதிபயனொன்றுக்காக கைமாற்றப்படும் ஏதேனும் ஆதனம் ஏதேனும் ஈட்டிற்கு விலங்கத்திற்கு அல்லது அக்கறை ஒதுக்கலுக்கு அமைவதாயிருக்குமிடத்து, கைமாற்றச் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, ஈட்டிற்கு, விலங்கத்திற்கு அல்லது ஒதுக்கலுக்கு ஆன கழிப்பனவு எதுவுமின்றி, கைமாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின்மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஆதனம், கொடை அளிப்பவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குச் சாதகமாக ஏதேனும் ஒதுக்கலுக்கமைய நன்கொடையாக அளிக்கப்படுமிடத்து, நன்கொடைச் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அவ்வாதனம் அவ்வொதுக்கல் இன்றியே கொடைகொளிக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டிருந்தது என்றாற்போன்று நன்கொடையாக அளிக்கப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின்மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

49. இலங்கை நாணயம் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயத்தில் ஏதேனும் சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான முத்திரைத்தீர்வை கூறப்பட்டவிடத்து, அச்சாதனத்தேதியன்று நிலவும் நடப்பு நாணயமாற்று வீதத்துக்கிணங்க இலங்கை நாணயப் பெறுமதியில் அத்தீர்வை கணக்கிடப்படுதல் வேண்டும்.

தீர்வையைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு சாதனங்களாக வகுத்தல்.

50. ஏதேனும் அசைவற்ற ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் துண்டுகளாக ஒரே ஆளுக்குப் பல்வேறு சாதனங்கள்மூலம் உரித்துமாற்றப்படுகின்றவிடத்தும் அல்லது கைமாற்றப்படுகின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனங்களின்மூலம் உரித்துமாற்றப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட மொத்த

இடப்பரப்பு தனியொரு சாதனத்தின்மூலம் உரித்துமாற்றப்பட்டிருப்பின் அல்லது கைமாற்றப்பட்டிருப்பின் விதிக்கப்படற்பாலதாகும் முத்திரைத் தீர்வையைத் தவிர்க்கும் முன்னெத்துடனேயே பல்வேறு சாதனங்கள் எழுதி நிறைவேற்றப்பட்டன என வரிமதிப்பீட்டாளருக்குத் தோன்றுமிடத்தும், அவர், அத்தகைய சாதனங்கள் அத்தகைய முன்னெத்துடன்/எழுதிநிறைவேற்றப்படவில்லை என்பதனை அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்குமாறு அத்தகைய சாதனங்களுக்கான திறத்தவர்களை அழைக்கலாம் என்பதுடன், அத்தகைய எண்பிப்பு கொடுத்துதவப்படாவிடில், அல்லது கொடுத்துதவப்பட்ட எண்பிப்பு போதுமானதாக இல்லாவிடில், அத்தகைய சாதனம் ஒவ்வொன்றுக்கும், சாதனமூலம் உரித்து மாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின்விகிதாசாரப்படி, அத்தகைய எல்லாச் சாதனங்கள்மீதும் விதிக்கப்படற்பாலதாகும் கூட்டுமொத்த முத்திரைத் தீர்வையை அத்தகைய சாதனங்கள்மூலம் கைமாற்றப்பட்ட மொத்த இடப்பரப்பினை உரித்துமாற்றுவதற்கென அல்லது கைமாற்றுவதற்கென தனியொரு சாதனம் எழுதிநிறைவேற்றப்பட்டிருந்தால் என்ன முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடுமோ அந்த முத்திரைத் தீர்வையின் ஒன்றரை மடங்கிற்குச் சமமாக ஆக்குகின்றவாறான அத்தகையதொரு தொகைகொண்டு முத்திரைத் தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XVII

### முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள்

தீர்வை யாரால் செலுத்தப்படற்பாலது என்பது.

51. முரணாக உடன்படிக்கையொன்று இருக்குமிடத்தன்றி—

(அ) உரித்துமாற்றமொன்றின் அல்லது உரித்துமாற்றுவதற்கான உடன்படிக்கையொன்றின் விடயத்தில், அளிப்புப் பெறுநரால் அல்லது/முன்னைப்பட்ட அளிப்புப் பெறுநரால்;

(ஆ) வேறு ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், அத்தகைய சாதனத்தை வரைகின்ற ஆக்குகின்ற அல்லது எழுதிநிறைவேற்றுகின்ற ஆளினால்,

முத்திரைத் தீர்வை செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

முத்திரைத் தீர்வைக்கு வேறு திறத்தவர்கள் ஆளாதல்.

52.(1) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனம் மாகாணத்தில் அல்லது மாகாணத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனம் தொடர்பில் எழுதிநிறைவேற்றப்படுமாயின் அத்துடன்உரியமுறையில் முத்திரையிடப்படாதிருப்பின், அப்போது, அத்தகைய சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஒவ்வோராளும் அத்தகைய தீர்வைத் தொகையையும் அத்தகைய தீர்வையைச் செலுத்தாமைக்காக விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றவிறுப்பையும் ஆணையாளருக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஏதேனும் சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையும் குற்றவிறுப்பும், (அவ்வாறு ஏதுமிருப்பின்)(1)ஆம் உட்பிரிவின்கீழ் உடன்படிக்கையின்மூலம் வேறுவகையில், அல்லது 51ஆம் பிரிவின் கீழ் அத்தகைய சாதனத்தின்மீது முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாயிருந்தவரான ஆள் அல்லாத வேறு எவரேனும் ஆளிடமிருந்து, ஆணையாளரினால் அறவிடப்பட்டிருக்கும்போது, அவ்வாறு அறவிடப்பட்ட தீர்வையினதும் குற்றவிறுப்பினதும் தொகையை(அவ்வாறு ஏதுமிருப்பின்) முதற்கூறப்பட்ட ஆள், இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஐம்பத்தோராம் பிரிவில், முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும்.

(4) இறந்த ஆளொருவரின் மரணசாதன தத்துவக்காரர், அத்தகைய இறந்த ஆள் உயிருடன் இருந்திருப்பின், எந்தச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாயிருந்திருக்கக்கூடுமோ அந்த எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இறந்த ஆள் எந்தச் சாதனங்களுக்குத் திறத்தவரொருவராக இருந்தாரோ அந்த எல்லாச் சாதனங்களினதும் தொடர்பில், அவர் உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு எந்த முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடுமோ, அந்த முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

ஆயினும் -

(i) இறந்த ஆளினதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில், மரணசாதன தத்துவக்காரருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் ஆகாது;

(ii) இந்த உட்பிரிவின்கீழ் மரணசாதன தத்துவக்காரரொருவரின் பொறுப்பானது -

(அ) முத்திரைத் தீர்வைக்கான பொறுப்பு இவ்வுட்பிரிவின்கீழ் எழுமென அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியன்று அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் இறந்த ஆளின் மரணச்சொத்தினதும் அத்துடன்

(ஆ) பயன்பெறுநர் ஒருவருக்குப் போயிருக்கக்கூடியதான மரணச்சொத்தின் ஏதேனும் பாகத்தினதும்,

பணத்தொகைக்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கம்பெனி ஒடுக்கப்படும் போதான பொறுப்பு.

53.(1) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் தனியார் கம்பெனி ஒடுக்கப்படுமிடத்து, அத்துடன், அக்கம்பெனியானது, முத்திரைத் தீர்வையாக எந்தத் தொகையைச் செலுத்துவதற்காளாகின்றதோ அந்த ஏதேனும் தொகையை அத்தகைய பொறுப்பு அதன் ஒழித்துக்கட்டலுக்கு முன்னர் எழுந்ததாயினுஞ்சரி, ஒழித்துக்கட்டலின்போது எழுந்ததாயினுஞ்சரி, ஒழித்துக்கட்டலின்பின்னர் எழுந்ததாயினுஞ்சரி, அறவிடமுடியாதிருக்குமிடத்தும், அப்போது, அத்தகைய தீர்வையைச் செலுத்துவதற்கான கம்பெனியின் பொறுப்பு எந்தக் காலப்பகுதியின்போது எழுந்ததோ அந்த ஏதேனும் காலப்பகுதியின்போது கம்பெனியின் பணிப்பாளரொருவராக இருந்த ஒவ்வொருவரும், தொகையின் கொடுப்பனவில் ஏற்பட்ட தவறுகையானது கம்பெனியின் அலுவல்கள் தொடர்பில் அவர்பாலான ஏதேனும் கடமைமீறலுக்கு ஏற்றிக்கூற முடியாதென அவர் எண்பித்தாலன்றி, அத்தகைய தொகையின் கொடுப்பனவிற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "தனியார் கம்பெனி" என்னும் சொல்லமைப்பு 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்

அத்தியாயம் XVIII

சாதனங்களை வலுவிழக்கச் செய்தல்

சாதனங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் சோதனை செய்வதற்கும் குறித்த சில அலுவலர்களுக்குள்ள தத்துவம்.

54.(1) சட்டத்தின்மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின்மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின்மூலம் அதிகாரம்பெற்றுள்ள ஒவ்வொராளும், அத்துடன், பகிரங்க அலுவலகமொன்றிலுள்ள (பொலிசு அலுவலரொருவர் அல்லாத) வேறு எந்த அலுவலரின் முன்னிலையில் அத்துடன், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின்,வங்கியின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையின் எந்த அலுவலரின் முன்னிலையில் அவரது அபிப்பிராயப்படி முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனம் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது கடமைகளைப் புரிகையில் அவர்முன் வருகின்றதோ அந்த அலுவலர் ஒவ்வொருவரும், அத்தகைய சாதனத்திற்கு உரியமுறையில் முத்திரையிடப்படவில்லையென அவருக்குத் தோன்றுமாயின், அத்தகைய சாதனத்தை வலுவிழக்கச் செய்தல் வேண்டும்.

ஆயினும், குற்றவியல் நீதிமன்றமொன்றில் நீதிவானின் அல்லது நீதிபதியின் முன்னிலையில், அந்நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது வருகின்ற ஏதேனும் சாதனத்தை வலுவிழக்கச் செய்தல் அல்லது சோதனை செய்தல் பொருத்தமாகும் என அவர் கருதாவிடில், இப்பிரிவிலுள்ள எதுவும் அவ்விதம் வலுவிழக்கச் செய்யுமாறு அல்லது சோதனைசெய்யுமாறு அவரைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

(2) முத்திரைத்தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனமானது பகிரங்க அலுவலகமொன்றிலுள்ள அல்லது கூட்டுத்தாபனமொன்றிலுள்ள அல்லது வங்கியிலுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவராண்மையொன்றிலுள்ள எந்த அலுவலரின் முன்னிலையில் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் வருகின்றதோ அந்த எவரேனும் அலுவலரை,

ஆணையாளர் -

(அ) அத்தகைய சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிப்பதற்காக அதனைச் சோதனை செய்யுமாறும்,

(ஆ) அத்தகைய சாதனத்தை வலுவிழக்கச்செய்யுமாறும்,

தேவைப்படுத்தலாம்.

(3) ஏதேனும் சாதனத்தைச் சோதனை செய்யுமாறு அல்லது வலுவிழக்கச் செய்யுமாறு (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆளெவரும் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தை, விடயத்திற்கேற்றவாறு, வலுவிழக்கச் செய்வதும் அல்லது சோதனை செய்வதும் அத்துடன் ஆணையாளர் தேவைப்படுத்தப்பட்டவாறுள்ள அத்தகைய மேலும் நடபடிகளை எடுத்தலும் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) ஆணையாளர் அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஒரு பகிரங்க அலுவலகத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, அல்லது வங்கிக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மைக்குப் பொறுப்பாயிருக்கின்ற எவரேனும் ஆளுக்கு உரிய முறையிலான அறிவித்தல் கொடுத்தபின்னர், அத்தகைய சாதனத்திற்கு உரியமுறையில் முத்திரை இடப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயப்படுத்துவதற்கென அத்தகைய அலுவலகத்தில், கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது முகவராண்மையில் உள்ள ஏதேனும் சாதனத்தை சோதனையிடலாம் என்பதுடன், அத்தகைய சாதனத்திற்கு அவ்விதம் முத்திரையிடப்படாதிருப்பின் அதனை வலுவிழக்கச் செய்தலும் வேண்டும்.

வலுவிழக்கச் செய்யப்பட்ட சாதனங்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல்.

55. (1) சான்று பெறுவதற்குச் சட்டத்தினால் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தினால் அதிகாரம்பெற்றுள்ள ஆளெவரும் அல்லது பதிவாளர் தலைமையதிபதி, 62ஆம் பிரிவிற்கான காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் சாதனத்தின்மீது செயலாற்றுமிடத்து, அவர், அதனைச் சமர்ப்பிக்கும் ஆளின் செலவில் வழங்கப்பட்டதான அத்தகைய சாதனத்தின் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும், அத்துடன் சேர்த்து முத்திரைத் தீர்வையினதும் அதன் தொடர்பில் அறவிடப்பட்ட குற்றவிறுப்பினதும், தொகையைக் கூறும் எழுத்திலான சான்றிதழொன்றையும் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகையை ஆணையாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்

(2) ஏனைய விடயம் ஒவ்வொன்றிலும் சாதனமொன்றை அவ்வாறு வலுவிழக்கச் செய்கின்றவரான ஆள் அதனை மூலப்பிரதியில் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

நற்செயலாக உரியமுறையில் முத்திரையிடப்படாத சாதனங்கள் தன்னிச்சையாக முன்வைக்கப்படல்.

56. முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதும் உரியமுறையில் முத்திரையிடப்படாததும், ஐம்பது சதத்தை விஞ்சாத முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதானவொரு சாதனமாக அல்லாததும், அல்லது மாற்றுண்டியலாக, காசோலையாக அல்லது வாக்குறுதிப்பத்திரமாக அல்லாததுமான ஏதேனும் சாதனம், எவரேனும் ஆளினால் அவரது சொந்தப் பிரரேரணையின் மீது, அது எழுதிநிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் வரிமதிப்பீட்டாளர் ஒருவரின் முன்னர் முன்வைக்கப்படுமிடத்து, அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு உரியமுறையில் முத்திரையிடப்படவில்லை என்ற நிகழ்வை அத்தகைய ஆள் வரிமதிப்பீட்டாளரின் கவனத்திற்குக் கொண்டுவருமிடத்தும், தகுந்த தீர்வைத் தொகையை அல்லது அதனை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் தொகையை வரிமதிப்பீட்டாளருக்குச் செலுத்த முனையுமிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு முத்திரையிடாது விடப்பட்டமை நற்செயலாக, தவறுதலாக அல்லது அவசரமான அவசியத்தினால் ஏற்பட்டதென வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுமிடத்தும் அவர் சாதனத்தை வலுவிழக்கச் செய்வதற்குப் பதிலாக அத்தகைய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான தகுந்த முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதென அதன்மீது புறக்குறிப்பிடுவதன்மூலம் குறிப்பிடுதலும் வேண்டும்.

ஆணையாளர் [illegible] வலுவிழக்கச் செய்யப்பட்ட சாதனத்தைக் கையாளுதல்.

57. (1) ஆணையாளர் 54ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் சாதனத்தை வலுவிழக்கச் செய்யுமிடத்து, அல்லது 55ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ், இரண்டுரூபா தொகையைக்கொண்ட தீர்வை விதிக்கப்படற்பாலதான சாதனமொன்றாக அல்லாத ஏதேனும் சாதனத்தை பெறுமிடத்து அவர், தேவை வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்: அதன் தொடர்பில் முத்திரையிடப்பட்டுள்ளது, என அதன்மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் அவர் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

ஆணையாளர் வலுவிழக்கச் செய்யப்பட்ட சாதனத்தைக் கையாளுதல்.

57. (1) ஆணையாளர் 54ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் சாதனத்தை வலுவிழக்கச் செய்யுமிடத்து அல்லது 55ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ், இரண்டு ரூபா தொகையைக்கொண்ட, தீர்வை விதிக்கப்படற்பால தான சாதனமொன்றாக அல்லாத ஏதேனும் சாதனத்தைப்பெறுமிடத்து, அவர் அதனை வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்: அதன் தொடர்பில் வரிமதிப்பீட்டாளர் பின்வரும் நடவடிக்கை முறைகளை மேற் கொள்ளுதல் வேண்டும்-

(அ) அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அல்லது அது முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல என அவர் அபிப்பிராயப்படுவாராயின், விடயத்திற்கேற்றவாறு அதற்கு உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அல்லது அது அவ்விதம் தீர்வைவிதிக்கப்படற்பாலதல்ல என அதன்மீது புறக்குறிப்பிடுவதன்மூலம் அவர் சான்றுப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதானது எனவும், அதற்கு உரியமுறையில் முத்திரையிடப்படவில்லை எனவும் அவர் அபிப்பிராயப்படுவாராயின் தகுந்த தீர்வையையும் அல்லது அதனை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் தொகையையும் அதனுடன் சேர்த்து, தகுந்த தீர்வைத் தொகையில் மூன்று மடங்கிற்கு மேற்படாததொரு குற்றவிறுப்பொன்றையும் செலுத்துமாறு அவர் எழுத்திலான அறிவித்தலின்மூலம், முத்திரைத் தீர்வை செலுத்துவதற்கான ஆணைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் சாதனத்தின்மீது தகுந்த முத்திரைத் தீர்வைத்தொகை செலுத்தப்பட்டும், அத்துடன் அத்தகைய சாதனம் எழுதிநிறைவேற்றப்பட்ட முறையில் உள்ள ஏதேனும் ஒழுங்கீனம் காரணமாக அல்லது சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட நேரத்தில் அதற்கு முத்திரை இடப்படவில்லை என்பதனால் அது வலுவிழக்கச் செய்யப்பட்டும் இருக்குமிடத்து, வரிமதிப்பீட்டாளர் அவ்வொழுங்கீனம் தற்செயலாக, தவறுதலாக அல்லது அ

அல்லது அவசரமான அவசியத்திறல் ஏற்பட்டதெனத் திருப்திப்படுவாராயின், ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றவிறுப்பொன்று செலுத்தப்படுவதன்பேரில், சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளதென அவர் அதன்மீது புறக்குறிப்பிடுவதன்மூலம் சான்றுபடுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்விதம் புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றுக்கும் அதன் எழுதி நிறைவேற்று கைத் தேதியிலிருந்தே உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதாகக் கருதப் படுதலும் வேண்டும்.

முத்திரைத் தீர்வை செலுத் தப்பட்டுள்ள சாதனத்திற்குப் புறக்குறிப்பிடுதல்.

58. (1) ஏதேனும் சாதனம் தொடர்பில் 56ஆம் பிரிவின்கீழ், அல்லது 57(1)(ஆ) என்னும் பிரிவின்கீழ் அறிவித்தலொன்றிறல் அல்லது 60ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை யும் குற்றவிறுப்பும் (ஏதுமிருப்பின்) செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அல்லது அற விடப்பட்டுள்ளவிடத்து, வரிமதிப்பீட்டாளர் அல்லது அத்தகைய சாதனத்தைச் சான்றாக ஏற்றுக்கொள்ளும் ஆள், அல்லது அத்தகைய சாதனத்தின்மீது செய லாற்றும் ஆள் அதன்மீது புறக்குறிப்பிடுவதன்மூலம்—

(i) சாதனத்தின் தொடர்பில் தகுந்த முத்திரைத் தீர்வையும் குற்றவிறுப்பும் செலுத்தப்பட்டுள்ளன எனவும்;

(ii) அவற்றைச் செலுத்துகின்ற ஆளின் பெயரையும் முகவரியையும் அத்துடன்

(iii) கொடுப்பனவுத் தேதியையும்

சான்றுப்படுத்தல் வேண்டும்.

அத்தகைய சான்றிதழ் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அதனகத்தே கூறப்பட்ட கருமங்களுக்கு முடிபான சான்றுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிற்கிணங்க, புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றும் உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், சான்றாக ஏற்கப்படற்பாலதாதலும் வேண்டும். அத் துடன் அது அவ்வாறு முத்திரையிடப்பட்டிருக்கின்றதென்றுபோன்று பதிவு செய்யப்படுதலும் அதன்மீது செயற்படப்படுதலும் வேண்டுமென்று உறுதிப்படுத்தப் படுதலும் வேண்டும் என்பதுடன், அது எந்த ஆளின் உடைமையிலிருந்து அதனை வலுவிறக்கச்செய்யும் அலுவலரின் கைக்கு வந்ததோ அந்த ஆளுக்கு அவரது விண்ணப்பத்தின்மீது திருப்பிக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

அனுப்பப்பட்ட சாதனத்தின் இழப்புக்குப் பொறுப்பாகாமை.

59. (1) ஆணையாளருக்கு 55ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட ஏதேனும் சாதனம் அனுப்புகையின்போது இழக்கப்படின், அழிக்கப்படின், அல்லது சேதப்படுத்தப்படின் அதனைஅனுப்பும் ஆள் அத்தகைய இழப்புக்கு, அழிவுக்கு அல்லது சேதத்துக்குப் பொறுப்பாதல் ஆகாது.

(2) ஏதேனும் சாதனம் அனுப்பப்படவிருக்கும்போது, அது எந்த ஆளின் உடைமையிலிருந்து அதனை வலுவிழக்கச் செய்யும் அலுவலரின் கைக்கு வந்ததோ அந்த ஆள், தமது செலவில் அதன் ~~பிரதியொன்றைத்~~ பிரதியொன்று ஆக்கப்பட்டு அத்தகைய சாதனத்தை வலுவிழக்கச்செய்யும் அலுவலரால் மெய்யென்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தேறைப்படுத்தலாம்.

## அத்தியாயம் XIX

## சாதனங்களின் ஏல்தகவு

சாதனங்களின் ஏல்தகவு.

60. முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான சாதனம் எதுவும், உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருந்தாலன்றி, அவை சான்றுகளைப் பெறுவதற்குச் சட்டத்தின்மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின்மூலம் அதிகாரம்பெற்றுள்ள எவரேனும் ஆளினால் சான்றுகப் பெற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது ஏல்தகவுடையதாதலோ அல்லது அத்தகைய எவரேனும் ஆளினால் அல்லது ஒரு பதிகை அலுவலகத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையில் உள்ள எவரேனும் அலுவலரினால் பதிவுசெய்யப்படுதலோ மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதலோ அல்லது அவர் அதன்மீது செயற்படுதலோ ஆகாது :

ஆயின், அத்தகைய ஏதேனும் சாதனம் அதற்கு விதிக்கப்படற்பாலதான தகுந்த தீர்வையும் அல்லது அதனை ஈடுசெய்வதற்குத் தேவைப்பட்ட தொகையும் அத்துடன் தகுந்த தீர்வையின் மும்மடங்கை விஞ்சாதவொரு குற்றவிறுப்பும் செலுத்தப்படுவதன்மீது—

(அ) சான்று பெறுவதற்குச் சட்டத்தின்மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின்மூலம் அதிகாரம்பெற்றுள்ள எவரேனும் ஆளினால் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம்; அல்லது

(ஆ) அந்தகைய சாதனத்தின்மீது விதிக்கப்படற்பாலதான முத்திரைத்தீர்வை ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்குக் குறைவானதாக இருக்குமாயின், பதிவாளர் தலைமையதிபதி அதன்மீது செயற்படலாம்.

எவரேனும் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி அல்லது பதிவாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட உதவிப் பதிவாளர் தலைமையதிபதி.

குறித்தசில விடயங்களில் பற்றுச்சீட்டுக்களின் ஏல்தகவு.

61. முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டொன்றை வழங்குமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளெவரும் முத்திரையிடப்படாத பற்றுச்சட்டொன்றை வழங்கி, அத்துடன் அந்தகைய பற்றுச்சீட்டு முத்திரையிடப்பட்டிருப்பின் அது அவருக்கெதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாக ஆகுமிடத்து, அந்தகைய பற்றுச்சட்டானது, 60ஆம் பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும், அதனைச் சமர்ப்பிக்கும் ஆளினால் ஐந்து ரூபா குற்றவிறுப்பொன்று செலுத்தப்படுவதன்மீது அவருக்கெதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XX

## முத்திரைத் தீர்வைபற்றிய தீர்த்தளிப்பு

62. ஏதேனும் சாதனம், அது எழுதி நிறைவேற்றப்பட்டதாயினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, அத்துடன் முன்னர் முத்திரையிடப்பட்டதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அதன் பிரதியொன்றுடன் சேர்ந்து வரிமதிப்பீட்டாளரொருவரிடம் கொணரப்படுமிடத்தும், அதனைக் கொணரும் ஆள், அதற்கு விதிக்கப்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வையிருப்பின் அத்தீர்வையைப் பற்றி வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கென விண்ணப்பித்து இருபத்தைம்பது ரூபா கட்டணமொன்றைச் செலுத்துமிடத்தும், வரிமதிப்பீட்டாளர் அச்சாதனத்திற்கு அவரது அபிப்பிராயப்படி விதிக்கப்படற்பாலதான அத்தகைய ஆளுக்கு அவரது தீர்மானத்தைப் பற்றி எழுத்தில் அறிவித்தலும் வே வேண்டும்.

தகுந்த முத்திரைத் தீர்வை

63. அறுபத்திரண்டாம் பிரிவின்கீழ் வரிமதிப்பீட்டாளர், அவரது அபிப்பிராயத்தை வழங்கும் நோக்கத்துக்கென அச்சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகுந்தன்மை தொடர்பிலான அல்லது அதற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வைத்தொகை தொடர்பிலான நிகழ்வுகளை எண்பிப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு சான்றை முன்வைக்குமாறு, அச்சாதனத்தைக் கொண்டும் ஆளைத் தேவைப்படுத்தலாம்:

ஆயினும், அத்தகைய ஏதேனும் சான்றினைக் கொடுத்துதவும் ஒவ்வொராளும் அது தொடர்புறும் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முழு முத்திரைத் தீர்வையும் செலுத்தப்படுவதன்மீது மேலே சொல்லப்பட்ட எவையேனும் நிகழ்வுகளை அல்லது சூழ்நிலைகளை அத்தகைய சாதனத்தில் அவர் உண்மையிலேயே கூறுவிட்டதன் காரணத்தினாலன்றி, வேறு வகையில் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரால் ஊறப்பட்டிறக்கக்கூடிய ஏதேனும் குற்றவிறுப்பிலின்றும் விடுவிக்கப்பட்டவராதல் வேண்டும்

வரிமதிப்பீட்டாளரால் புறக்குறிப்பிடப்படுதல்.

64. (1) வரிமதிப்பீட்டாளர் 62ஆம் பிரிவின்கீழ் அவரிடம் கொணரப்படும் ஏதேனும் சாதனத்தின்மீது புறக்குறிப்பிடுவதன்மூலம் அச்சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதாதான ஏதேனும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல என அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் எந்தச் சாதனத்தின்மீது புறக்குறிப்பொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் சாதனத்திற்கு விடயத்திற்கேற்றற்போன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதென அல்லது அது முத்திரைத தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகுமாயின் சான்றாக அல்லது வேறுவகையாக பெற்றுக்கொள்ளப்படற்பாலதாதலும் வேண்டும்; அத்துடன் அது ஆரம்பத்திலேயே உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருந்தது என்றுபோன்று அதன்மீது செயலாற்றப்படலாம் என்பதுடன், அது பதிவு செய்யவும்படலாம்:

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும்—

(அ) இலங்கையில் எழுதிநிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதி நிறைவேற்றப்பட்டு, விடயத்திற்கேற்ற

போன்று அதன் எழுதி நிறைவேற்றுகை அல்லது முதல் எழுதி நிறை வேற்றுகைத் தேதியிலிருந்து ஒரு மாதம் கழிந்ததன்பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் சாதனத்திற்குக் அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே எழுதிநிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதிநிறைவேற்றப்பட்டு, அது இலங்கையில் பெறப்பட்டபின் ஒரு மாதம் கழிந்ததன்பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் சாதனத்திற்கு; அல்லது

புறக்குறிப்பிடுவதற்கு வரிமதிப்பீட்டாளருக்கு அதிகாரமளித்தலாகாது.

## அத்தியாயம் XXI

### முத்திரைகளுக்கான விடுபாடுகள்.

பயன்படுத்தப் படாதவையும் பழுதாக்கப் பட்டவையுமான முத்திரைகளுக் கான விடுபாடு கள்.

65. (1) ஆணையாளர் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அவருக்கு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீதும், நிகழ்வுகளைப் பற்றித் திருப்தியுறுவதன்மீதும், பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகளுக்கு விடு பாடொன்றை வழங்கலாம்:-

(அ) முத்திரையொன்று எந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படு வதற்கென முன்னப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு உகந்த தல்லாதவகையில் தவறுதலாக அல்லது உள்நோக்கமின்றிப் பழுதாக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) பூரணமற்ற அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டில்லாத அல்லது வறிதாக்கப்பட்ட அல்லது தவறுதல் ஒன்றின் காரணமாக முன் னப்பட்ட நோக்கத்திற்கு உகந்ததல்லாத சாதனமொன் றுக்கு முத்திரை ஒன்று ஒட்டப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) சாதனமொன்றுக்குத் தவறுதலாக அல்லது உள்நோக்கம் இல்லாமல் பிழையான விவரணத்தை அல்லது பெறுமதியைக் கொண்ட முத்திரையொன்று ஒட்டப்பட்டிருந்த, அதனையடுத்து முறைப்படி முத்திரையொட்டப்பட்ட சாதனமானதில் மாற்று செய்யப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(1) [illegible]

(2) ஒராமுட்பிரிவின்கீழான விடுபாட்டுக்கான விண்ணப்பம் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒராண்டிற்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர், (1)ஆம் உட்பந்தியின்கீழ் விடுபாடொன்றிற்கான விண்ணப்பமொன்றின்மீது, ஒன்றில் விண்ணப்பகாரருக்கு அதே விவரணத்தையும் பெறுமதியையுங்கொண்ட வேறு முத்திரைகளை அன்றேல் அவர் முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்கலாம்; அத்துடன் அவர் முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்குமிடத்து, ஒவ்வொரு ரூபாவுக்கும் அல்லது ஒரு ரூபாவின் பின்னத்திலும் ஐந்து சதத்தைக் கழித்தல் வேண்டும்.

## அத்தியாயம் XXII

## தவறுகளும் தண்டங்களும்

66. (1) (அ) தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை அதற்கு உரியமுறையில் முத்திரையிடப்படாமல், சாட்சிக்காரரொருவராகவல்லாத வேறுவகையில் எழுதி நிறைவேற்றுகின்ற; அல்லது

(ஆ) ஒட்டு முத்திரையொன்றை 41ஆம் பிரிவிலுல் விதித்துரைக்கப்பட்ட முறையில் பொறித்தழிக்கத் தவறுகின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர், சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) சட்டபூர்வமான அதிகாரமின்றி எத்தன்மைத்தான எம்முறையிலேனும் ஏதேனும் முத்திரையை அல்லது வார்ப்பு அச்சை செய்வதில் அல்லது உற்பத்திசெய்வதில் உதவியளிக்கின்ற அல்லது செய்கின்ற அல்லது உற்பத்திசெய்கின்ற அல்லது அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் முத்திரையை அல்லது வார்ப்பு அச்சை தமது உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும்

ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்கச் செயலாற்றத் தவறுகின்ற பிரசித்த நொத்தாரிசு.

67. எழுபத்தெட்டாம் பிரிவினால் தம்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு மனதறிய இணங்கியொழுகத் தவறுகின்ற பிரசித்த நொத்தாரிசு எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், எந்தச் சாதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்தச் சாதனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும், ஐயாயிரம் ரூபாவிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சபைக்கெதிராக மோசடி செய்வதற்குரிய குற்றவிறுப்பு.

68. (அ) ஏதேனும் சாதனத்தில் தரப்படவேண்டுமென 78ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் முழுமையாகத் தரப்படாமல், சபையை மோசடி செய்யும் முன்னத்துடன் அத்தகைய சாதனத்தை வரைகின்ற, அத்தாட்சிப்படுத்துகின்ற அல்லது எழுதி நிறைவேற்றுகின்ற;

(ஆ) தாம் எழுதிநிறைவேற்றிய, மெய்யென்றுறுதிப்படுத்திய அல்லது அத்தாட்சிப்படுத்திய ஏதேனும் சாதனத்தின்மீது முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கான ஏதேனும் பணத்தொகையைப் பெற்றுக்கொண்டு அப்பணத்தை முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்குப் பயன்படுத்தாமல் அதனையோ, அதன் ஏதேனும் பாகத்தையோ தனாதமுறையில் பிடித்துவைத்திருக்கின்ற அல்லது நடுத்துவைத்திருக்கின்ற; அல்லது

(இ) ஏதேனும் சாதனத்தை எழுதிநிறைவேற்றுகையில் மெய்யென்றுறுதிப்படுத்துகையில் அல்லது அத்தாட்சிப்படுத்துகையில் உண்மையல்லாத அல்லது முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் முத்திரையை ஒட்டுகின்ற அல்லது பொறித்தழிக்கின்ற; அல்லது

(ஈ) இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வை அல்லது குற்றவிறுப்பு சபைக்குக் கிடைக்காமற் செய்வதற்கென கணிக்கப்பட்ட வேறு ஏதேனும் செயலைப் புரிகின்ற; அல்லது

(உ) தம்மீது 54(3)ஆம் பிரிவின்கீழ் ஆணையாளரினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஊ) ஆணையாளருக்கு 54(4)ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணையாளர் தலைமையதிபதியை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்–

(I) உட்பிரிவு (ஆ) என்பதன்கீழான தவறொன்றின் விடயத்தில், அத்தகைய ஆளினால் பிடித்துவைக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட முத்திரைத் தீர்வையின் தொகைக்குச் சமமான பணத்தொகையொன்றும், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றும் அடங்கிய குற்றப்பணமொன்றுக்கும்;

(II) உட்பிரிவு (இ) என்பதன்கீழான தவறொன்றின் விடயத்தில், அத்தகைய ஆளினால் ஒட்டப்பட்ட அல்லது பொறித்தழிக்கப்பட்ட முத்திரைத் தொகையின் பத்துமடங்கிற்குச் சமமான பணத்தொகையொன்றும், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றும் அடங்கிய குற்றப்பணமொன்றுக்கு;

(III) உட்பிரிவு (அ) அல்லது (ஈ) அல்லது (உ) அல்ல(ஊ) என்பதன்கீழான தவறொன்றின் விடயத்தில், ஐயாயிரம்

69 எழுபத்திமூன்று (8) என்னும் பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்டஅறிவித்தலில் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விசாரணையின்பின்னர் ஐயாயிரம் பாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

குற்றவிறுப்புகள் முதலியவற்றிற்கான ஏதேனும் நடவடிக்கை எவ்வாறிருப்பினும் முத்திரைத்தீர்வையின் அல்லது குற்றவிறுப்பின் தொகை செலுத்தப்படற்பாலதாகும் என்பது.

70. [illegible] கீ கெதிராகக் குற்றவழக்கொன்று தொடருதலாகாது, அல்லது அத்தகைய ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் ஆளின்மீது குற்றவிறுப்பொன்றை குற்றப்பணமொன்றை அல்லது மறியற்றண்டனையை விதித்தலாகாது, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால் உறப்பட்டுள்ள அல்லது உறப்படக்கூடிய ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தவேண்டிய ஏதேனும் பொறுப்பிலிருந்து அவரை விடுவித்தலாகாது.

குற்றவழக்குகளைத் தொடுத்தலும் நடாத்துதலும்.

71. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பில் குற்றவழக்கெதுவும் ஆணையாளரின் சம்மதமின்றித் தொடரப்படுதலாகாது.

தவறுகளை இணக்கித் தீர்ப்பதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

72. ஆணையாளர் தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இச்சட்டத்தின்கீழான தவறு எதனையும் இணக்கித் தீர்க்கலாம் என்பதுடன், தீர்ப்பிற்கு முன்னர் அதன்கீழான எவையேனும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கலாம் அல்லது இணக்கித் தீர்க்கலாம்.

## அத்தியாயம் XXIII

### பொது

அறிவித்தலிலுள்ள கையொப்பம், அதனைச் சேர்ப்பித்தல், அதன் செல்லுபடியாகுந்தன்மை என்பன.

73.(1) இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆணையாளர், அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படவேண்டிய அறிவித்தல் ஒவ்வொன்றும் விடயத்திற்கேற்றவாறு, ஆணையாளர் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயரைக்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன்மீது ஆணையாளர் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயர் உரியமுறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் செல்லுபடியுடையனவாதலும் வேண்டும்.

(2) இந்தியநிச்சட்டத்தின் பயன்கொண்டு வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஆளொருவருக்குள்ள நேரடியாக அல்லது கடைசியாக அறியப்பட்ட அவரது வதிவிடத்திற்காவது அல்லது அவர் தொழில் கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்திய ஏதேனும் இடத்திற்காவது ஒப்படைப்பதன்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும், சாதாரண நெறியில் அஞ்சல்மூலம் அது எந்த நாளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமோ அந்த நாளை அடுத்துவரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்பட்டதை எண்பிக்கையில் அறிவித்தலை உள்ளடக்கிய கடிதம் உரியமுறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலிடப்பட்டதென்பதனை காண்பிப்பது போதுமானதாதல் வேண்டும்.

(5) இந்தியநிச்சட்டத்தின் நோக்கங்களுக்கென கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின்மீது அச்சிடப்பட்டிருப்பதும் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அல்லது ஏதேனும் சான்றிதழின்மீது ஒப்பமிடப்பட்டிருப்பினும் அதனைக் கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் ~~பெயரென~~ பெயராகக் கொள்ளப்பட்டதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறைக் கவனத்துக்குட்டப்படதாதல் வேண்டும்.

(6) இந்தியநிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருப்பதாகக் கொள்ளப்பட்ட அறிவித்தல், சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கைஎதுவும், பொருளிலும் பயனிலும் அது இச்சட்டத்திற்கு அமைவானதாக அல்லது இச்சட்டத்தின் முன்னத்துக்கும் கருத்துக்கும் இணங்கியதாக இருப்பின் அத்துடன் அத்தகைய அறிவித்தல் அல்லது சான்றிதழ் எந்த ஆளுக்குக் கொடுக்கப்படுகின்றதோ அல்லது கொடுக்கப்படவேண்டுமென முன்னைப்பட்டதோ அந்த ஆள் அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள், பொது முன்னத்துக்கும் உய்த்துணரலுக்கும் இணங்க அதில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின் படிவம் இல்லையென்ற காரணத்துக்காக நீக்கப்படுதல் அல்லது வறிதானதாதல் அல்லது வறிதாக்கப்ப

படற்பாலது எனக் கருதப்படுதல் ஆகாது. அல்லது அதனகத்துள்ள தவறென்றின் குறைபொடொன்றின் அல்லது ஏதேனும் விடுவிடுகையின் காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.

(7) ஆறும் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி ஓர் அறிவித்தலானது விதிக்கப்படுவதற்கு முன்னைபட்ட ஆளிடம் உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட்டிருப்பின் தொகை விதிக்கப்படற்பாலதான ஆளின் பெயர் அல்லது குடும்பப்பெயர் தொடர்பாக அதனகத்துள்ள தவறென்றின் காரணத்தினால் அவ்வறிவித்தலில் குறைகாணப்படுதலோ அல்லது அது பாதிக்கப்படுதலோ ஆகாது.

தகவல் கோருவதற்கான தத்துவம்.

(8)(1) ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது ஒரு வரிமதிப்பீட்டாளர் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(I) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக பரிசோதனைக்கென அவருக்குக் காண்பிக்குமாறு அல்லது அனுப்பிவைக்குமாறு;

(II) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு;

(III) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் கருமம்பற்றி அவரை விசாரிக்கக்கூடியவிதமாக அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய இடத்திலும் அத்தகைய தேதியிலும அத்தகைய நேரத்திலும் நேரிலோ அல்லது ஒரு பிரதிநிதியை அதிகாரமளிப்பதன்மூலமோ சமுகமளிக்குமாறும்,

எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(2) ஏதேனும் தகவலைக் கொடுக்குமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தி (1)ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய தகவலைக் கொடுத்துவதைத் தடைசெய்யும் வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) இரண்டாமுட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணக்கமாகச் சமுகமளிக்கின்ற எவரேனும் ஆள், அவ்வாறு சமுகமளிப்பதில் நியாயமாக உறப்படக்கூடியவாறான அத்தகைய செலவுதொகைகள் ஆணையாளரினால் அனுமதிக்கப்படலாம்.

(4) இப்பிரிவில் "ஆள்" என்பது ஒரு வங்கியாளரையும் உள்ளடக்கும்.

குற்றவிறுப்புக்கள் தொடர்பில் தற்றுணிபுகளைப் பிரயோகித்தல்.

74. இந்நியதிச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளின்மீது சுமத்தப்படவுள்ள ஏதேனும் குற்றவிறுப்புத் தொகை தொடர்பில் ஆணையாளருக்கு அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஏதேனும் தற்றுணிபு அளிக்கப்பட்டுள்ளவிடத்து, அக்குற்றவிறுப்பு உறப்பட்ட எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்திற்கெடுத்ததன் பின்னர், விடயத்திற்கேற்றவாறு ஆணையாளர் அல்லது வரிமதிப்பீட்டாளரால் அத்தகைய தற்றுணிபு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தும் ஆட்கள் குறித்தசில சந்தர்ப்பங்களில் அதை மீட்டுப் பெறுதல்.

75. (1) சாதனமொன்றின் தொடர்பில் எவரேனும் ஆளினால் ஏதேனும் முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு செலுத்தப்பட்டிருந்து, அத்தடன் உடன்படிக்கையின்மூலம் அல்லது இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் வேறோர் ஆள் அத்தகைய சாதனம் தொடர்பில் முத்திரைத் தீர்வை செலுத்துவதற்கானவராயிருந்திருப்பாராயின், முதலிற் குறிப்பிடப்பட்ட ஆள், அவ்விதம் செலுத்தப்பட்ட தீர்வைத் தொகையை அல்லது குற்றப்பணத்தை அத்தகைய வேறு ஆளிடமிருந்து மீட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய மீட்டுப்பெறுதலின் நோக்கங்களுக்கென, அச் சாதனம் தொடர்பிலான முத்திரைத் தீர்வை சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்பட்டுள்ளதென ஆணையாளரினால் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று அதிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய முடிவான சான்றாதல் வேண்டும்.

கட்டளைகள். 76. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைகள் மூலம் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட விவரணத்திலான முத்திரைகள், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சாதனங்கள், முத்திரையிடுவதற்கெனப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய சாதனங்களின்மீது முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கென அந்த விவரணத்திலான முத்திரைகள், அல்லாத வேறு முத்திரைகளைப் பயன் படுத்துவது ஆளெவருக்கும் சட்டமுறையானதாதல் ஆகாது.

(2) ஏதேனும் நாட்டின் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில், அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப் படும் ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், அந்த நாட்டில் முத்திரைத் தீர்வையெதுவும் விதிக்கப்படற்பாலதல்ல என அமைச்சரானவர் திருப்திப் படுவதன்பேரில் 39ஆம் பிரிவின் 3ஆம் பந்தியால் அளிக்கப்படும் விலக்களிப்பு அந்த நாட்டின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் ஒத்த சாதனமொன்றுக்கு ஏற்புடைய தாதல் வேண்டும் என அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால் வெளிப்படுத்தலாம்.

ஒழுங்குவிதிகள். 77. (1) அமைச்சரானவர், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் தொடர்பில் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் –

(அ) விதிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஆ) எந்தச் சாதனங்கள் தொடர்பில் முத்திரைத் தீர்வையானது பொறித்திட்ட முத்திரைகளின் வழியாகச் செலுத்தப்படற்பால தாகலாமோ அந்தச் சாதனங்கள்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்ப படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனச் சபையின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உரித்துமாற்றல் சாதனங்கள் சம்பந்தமான நிபந்தனைகள்.

78. (1) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை வரைகின்ற, ஆக்குகின்ற, எழுதி நிறைவேற்றுகின்ற அல்லது அத்தாட்சிப்படுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய சாதனத்திற்கான கட்சிக்காரர்களாகவுள்ளவர்களின் முழுப்பெயர்களையும் முகவரிகளையும் பிரதிபயனையும் கொடுப்பனவுத் திகதியையும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறையையும், அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகும் தன்மையைப் பாதிக்கின்ற மற்றெல்லா நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அத்துடன் எத்தகைய முத்திரைத் தீர்வை அச்சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதோ அத்தகைய முத்திரைத் தீர்வையின் தொகையையும் அதனகத்து தருதல் வேண்டும்.

(2) உரித்துமாற்றற் சாதனமொன்றினை அத்தாட்சிப்படுத்தும் ஒவ்வொரு பிரசித்த நொத்தாரிசும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னர் எந்தப் பெறுமதியின்மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்படுகின்றதோ அந்தப் பெறுமதி உரித்துமாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியைக் குறித்துக் காட்டுகிறது எனத் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(3) எந்தச் சாதனத்திற்கு ஒட்டு முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்த ஏதேனும் சாதனத்தை அத்தாட்சிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும், அத்தகைய சாதனத்திற்குச் சரியான விவரணத்தையும் பெறுமதியையுங்கொண்ட முத்திரைகளை ஒட்டுதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இச்சட்டத்தில் பணிக்கப்பட்ட முறையில் பொறித்தழித்தலும், அத்

அத்துடன் அவரது அத்தாட்சிப்படுத்துதலில் அத்தகைய சாதனத்திற்கு ஒட்டப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை யையும் பெறுமதியையும் குறிப்பிடுதலும் வேண்டும்.

(4) நாற்பதாம் பிரிவின் (2)ஆம் (3)ஆம் உட்பிரிவுகளில் காட்டப்பட்ட முறையில் ஒரு சாதனத்தின்மீது முத்திரைத்தீர்வை செலுத்தப்படும்போது உரித்துமாற்றற் சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு வங்கியிலுள் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் சமய்நிதத் சாதனத்துடன் முறையாக அனெக்கப்பட்டுள்ளதெனவும் சாதனம் நிறைவேற்றப்படும்போது அல்லது முன்னர் தீர்வை செலுத்தப்படாதவிடத்து, உறுதியில் அதற்கான காரணங்களைச் சான்றுப்படுத்துதலும் வேண்டும்.

பாகம் 3

அத்தியாயம் XXIV

மேன்முறையீடுகள்

மாகாண ஆணையாளருக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்.

79. (1) ஆள் எவரும், அவர் தொடர்பில் மாகாண வரிமதிப்பீட்டாளரினால் செய்யப்பட்ட வரிமதிப்பீட்டுடன் அல்லது மேலதிக வரிமதிப்பீட்டுடன் அல்லது இந்நியதிச்சட்டத்தின் 3ஆம் பாகத்தின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றினால் இடருற்றால் அல்லது வேறு பாகத்தில் 62ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அபிப்பிராயமொன்றினால், அல்லது 57( )(ஆ) என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தே தேவைப்பாட்டினால் இன்னலுறுபவரான ஆளெவரும் அத்தகைய வரிமதிப்பீட்டு, மேலதிக மதிப்பீட்டு அல்லது தண்டத் தேதியின் அல்லது அத்தகைய ஆள், மேன்முறையீடு செய்துள்ளார் என்பது எப்படியிருப்பினும், அத்தகைய வரி மதிப்பீட்டினால், மேலதிக வரிமதிப்பீட்டினால், அபிப்பிராயத்தினால், தேவைப்பாட்டினால் விதிக்கப்பட்ட அல்லது அறவிடப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியை அல்லது முத்திரைத் தீர்வையை இந்நியதிச்சட்டத்தினால் அவர்மீது சுமத்தப்படக்கூடிய ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து, ஆனால் மொத்த விற்பனை வரவு வரிக் கொடுப்பனவு அல்லது முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு

மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை செய்யப்படவேண்டியதில்லை என ஆணையாளர் கட்டளையிட்டாலொழிய, செலுத்துதல் வேண்டும். அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் அவ்வாறு பிடித்துவைக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வைத் தொகை அல்லது அதன் பாகம் தவணைதவறியதாகக் கருதப்படமாட்டாது.

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது நியாயமான வேறு காரணத்தால் மேன்முறையீட்டாளர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக மேன்முறையீடு செய்வதிலின்று தடுக்கப்பட்டார் என ஆணையாளர் திருப்தியடைவதன்மேல், மேன்முறையீடு செய்வதற்கென காலநீடிப்பொன்றினை ஆணையாளர் வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மேன்முறையீடும் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனு ஒன்றின்மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைத் தருதலும் வேண்டும்.

(3) எந்த வரிமதிப்பீட்டுக்கு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடு விவரத்திரட்டு இல்லாதபோது, செய்யப்பட்டவிடத்து, மேன்முறையீட்டு மனு முறையாகச் செய்யப்பட்ட விபரத்திரட்டுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(4) ஒராம், (2)ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கி அமையாதிருக்கும் மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(5) செல்லுபடியான மேன்முறையீட்டு மனு ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆணையாளர் வரிமதிப்பீட்டாளர் ருவாிறுல் மேலும் விசாரணை நடாத்தப்படச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின்போது மேன்முறையீட்டு மனுவில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றிய நடவடிக்கையொன்று ஏற்படுமாயின், அதற்கிணங்க அபிப்பிராயத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகை திருத்தப்படுதலும் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் மேன்முறையீட்டாளருக்கும் வரிமதிப்பீட்டாளருக்கும் இடையில் உடன்படிக்கை

யெதுவும் ஏற்படாதவிடத்து, ஆணையாளர் மேன்முறையீட்டினைக் கேட்பதற்கென நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும், மேன்முறையீட்டைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளரின் முன்னர் வருகைதருதல் வேண்டும். மேன்முறையீட்டாளர் மேன்முறையீட்டுக் கேட்பின்போது நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமோ வருகைதரலாம். ஆணையாளர், காலத்துக்குக்காலம் அந்நோக்கத்துக்கென அவர் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்திவைக்கலாம். அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மேன்முறையீட்டாளர் சார்பில் வருகைதரும் ஏதேனும் விடயத்தில் ஆணையாளர் மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்திவைக்கலாம். என்பதுடன், மேன்முறையீட்டினைத் தீர்மானிப்பதற்கு மேன்முறையீட்டாளர், நேரில் வருகைதருவது அவசியமானதென அவர் கருதினால், மேன்முறையீட்டில் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதருதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம். மேன்முறையீட்டாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி மேன்முறையீட்டின் கேட்புக்கென அல்லது மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும்இடத்திலும் வருகைதரத் தவறினால், அல்லது மேன்முறையீட்டாளர், ஆணையாளரினால் வருகைதருதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டபோது வருகைதரத் தவறினால், ஆணையாளர் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்:

ஆயின், மேன்முறையீட்டாளர், மேன்முறையீடு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் நியாயமான காலத்துக்குள்ளாக, அவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது வேறு தவிர்க்கமுடியாத காரணத்தினால் அத்தகைய மேன்முறையீட்டின் கேட்புக்கு அல்லது ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கு உரியமுறையில் வருகைதரமுடியாமல் தடுக்கப்பட்டார் என ஆணையாளரைத் திருப்திப்படுத்தினால், ஆணையாளர் தள்ளுபடிக் கட்டளையை வறிதாக்குதல் வேண்டும் என்பதுடன், மேன்முறையீட்டுக் கேட்புக்கென நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தலும் வேண்டும்.

(8) ஆணையாளர் மேன்முறையீடு சம்பந்தமாக சான்றளிக்க இயலுமானவர் எனத் தாம் கருதும் ஆளெவரையும் தம்முன்னர் வருகைதருமாறு கட்டளையிட்டழைப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளைச் சத்தியத்தின்மேல் அல்லது வேறுவகையாக விசாரணையும் செய்யலாம். அவ்வாறு வருகைதரும் எவரேனும் ஆளினால் அவ்வாறு வருகைதருவதில் அவசியமாக உறப்பட்ட எவையேனும் நியாயமான செலவுகள் அத்தகைய ஆளுக்கு ஆணையாளரினால் அனுமதிக்கப்படலாம்.

(9) ஏதேனும் மேன்முறையீட்டின்மீது தமது தீர்மானத்தைச் செய்வதற்கு முன்னர், ஆணையாளர் அவசியமானதெனக் கருதினால், எவரேனுமாளுக்குக் கொடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டுள் காலத்துள், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்/ பட்டுள்ள காலத்துள், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்க்கூடியவாறான அவரது உடைமையிலுள்ள அத்தகைய எவையேனும் உறுதிகளை, வரைபடங்களை, இடாப்புக்களை, காசோலைகளை கணக்காய்வாளரின் அல்லது விலைமதிப்பாளரின் அறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை பரிசோதனைக்கென முன்வைக்குமாறு அல்லது ஆணையாளர் அனுப்பிவைக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(10) ஆணையாளர் மேன்முறையீடு சம்பந்தமாக மேன்முறையீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சான்றினைக் கேட்குமிடத்து, அவர் அத்தகைய சான்று பற்றிய பதிவேடொன்றைப் பேணிவருதல் இல்லது பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

(11) இப்பிரிவின்கீழான மேன்முறையீடு ஒன்றினைத் தீர்மானிப்பதில், ஆணையாளர் எந்த அபிப்பிராயத்துக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது திருத்தலாம்' அல்லது எந்த அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன், அவர் மேன்முறையீட்டின்மீதான தமது தீர்மானம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேன்முறையீட்டாளருக்குக் கொடுத்தலும் வேண்டும்.

(12) மேன்முறையீடு இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டவிடத்து, அல்லது ஆணையாளரினால் கட்டளையொன்று ஆக்கப்படுவதன்மீது (1)ஆம் உட்பிரிவின்கீழ் பிடித்துவைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை செலுத்துமதியாக வருமிடத்து, அல்லது மூலமதிப்பீட்டினால் அறவிடப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை அதிகரிக்கப்பட்டவிடத்து, ஆணையாளர், அத்தகைய ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லது மொத்த விற்பனை வரவு வரி விதம் அல்லது முத்திரைத் தீர்வை அல்லது அதன்மீதம் எத்தேதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் செலுத்தப்படாத மொத்த விற்பனை வரவு வரி அல்லது முத்திரைத் தீர்வை தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) ஒரு வரிமதிப்பீடு அல்லது அபிப்பிராயம் அல்லது தேவைப்பாட்டுக்கு எதிராக மேன்முறையீடொன்று இருக்கின்றவிடத்தும், வரிமதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி அல்லதுமுத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு பிடிக்கு வைக்கப்பட்டிருக்குமிடத்தும், ஆணையாளர், அம்மேன்முறையீட்டை விசாரணை செய்யும்போது, அல்லது விசாரிக்கும்போது அவ்வரிமதிப்பீடு அல்லது தேவைப்பாடு தொடர்பில் மொத்தவிற்பனை வரவு வரியாக அல்லது முத்திரைத் தீர்வையாக குறித்வொரு பணத்தொகை செலுத்துமதியானதென அல்லது செலுத்துமதியாக இருக்கக்கூடுமென மேன்முறையீட்டாளர் உடன்பட்டால், மேன்முறையீட்டாளருக்குக் கொடுக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதிக்குமுன்னர் அப்பணத்தொகையைச் செலுத்துமாறு பணிக்கலாம். அவ்வாறு கொடுக்கப்படாத ஏதேனும் பணத்தொகை தவணைதவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXV

## மீளாய்வுச் சபைக்குச் செய்யப்படும் மேன்முறையீடு

மீளாய்வுச் சபையை அமைத்தல்.

80. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் மேன் முறையீடுகளை விசாரிக்கும்நோக்கத்துக்காக (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட மீளாய்வுச் சபையொன்று இருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாதலும் வேண்டும். ஓர் உறுப்பினர் தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபைக்குச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்; அவர் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) தலைவரினால் பெயர்குறித்துநியமிக்கப்படும் சபையின் எவரேனும் மூன்று உறுப்பினர்கள் ஏதேனும் மேன்முறையீட்டை விசாரிக்கலாம்.

(4) மாகாண ஆணையாளரின் வேண்டுகோளின்பேரில் சபைக்கான செயலாளர் சபையின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(5) சபை உறுப்பினர்களினதும் செயலாளரினதும் ஊதியம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

மீளாய்வுச் சபைக்கான மேன்முறையீடுகள்.

81. (1) ஆணையாளருக்கு 79ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது ஆணையாளரின் தீர்மானத்தினால் இடருற்ற எவரேனும் ஆள் அத்தீர்மானம் பற்றிய அவரது அதிருப்தியை ஆணையாளருக்கு எழுத்தில் தெரிவித்தலாம். அத்தகைய தெரிவிப்பு ஒவ்வொன்றும் தீர்மானிப்புத் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளரின் தீர்மானம் பற்றிய தமது அதிருப்தியை (1)ஆம் உட்பிரிவுக்கிணங்க மேன்முறையீட்டாளர் தெரிவித்துள்ளவிடத்து, ஆணையாளர், அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து ஒருமாதத்துக்குள்ளாக அத்தீர்மானத்துக்கான அவரது காரணங்களை மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) தீர்மானிப்புக்கான காரணங்கள் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு மாதத்துக்குள்ளாக மேன்முறையீட்டாளர் சபைக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுமூலம் அத்தீர்மானத்திற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மனு ஒவ்வொன்றும் -

(அ) ஆணையாளரின் எந்தத் தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகிறதோ அந்தத் தீர்மானத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்;

(ஆ) அதற்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான காரணங்களை சுருக்கமாகத் தருதல் வேண்டும்; அத்துடன்

(இ) சபையின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

மானாண ஆணையாளர் மேன்முறையீடுகளை மீளாய்வுச்சபைக்கு ஆற்றுப்படுத்தலாம்.

82. ஆணையாளர் தமக்குச் செய்யப்பட்ட செல்லுபடியான மேன்முறையீடு எதனையும் மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் மீளாய்வுச் சபை அத்தகைய மேன்முறையீட்டை விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க 83ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் விசாரணைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

83. (1) இச்சமுறையீட்டு மனுவொன்றைப் பெற்றதன்பின்னர் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, சபைக்கான செயலாளர் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கான தேதியையும் நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளருக்கும் அதுபற்றிப் பதினான்கு நாள் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

(2) ஒராமுட்பிரிவின்கீழான அறிவித்தலொன்றைப் பெற்றதன்மேல் ஆணையாளர் 79(10)என்னும் பிரிவின்கீழ் பேணப்படும் சான்றுப் பதிவேட்டின் பிரதியொன்றைச் சபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்

(3) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் மேன்முறையீடொன்றின் விசாரணையில் நேரில் சமுகந்தரவேண்டும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிமூலம் சமுகந்தரவேண்டும். சபையானது மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதருவதனை இயலச்செய்வதற்கு அவசியமென அது கருதும் அத்தகைய காலத்துக்கு விசாரணையைத் தள்ளிப்போடலாம்.

(4) மேன்முறையீடு செய்யப்பட்டவரிமதிப்பீட்டைச் செய்த அல்லது அபிப்பிராயத்தைத் தெரிவித்த அல்லது தேவைப்பாட்டைச் சுமத்திய வரிமதிப்பீட்டாளர் அல்லது ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வரிமதிப்பீட்டுக்கு ஆதரவாக அத்தகைய மேன்முறையீடு விசாரிக்கப்படும் சபைக் கூட்டத்தில் சமுகந்தருதல் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்றதுபோல, மேன்முறையீட்டில் ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறான அல்லது 82ஆம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்தப்பட்டவாறான வரிமதிப்பீடு, அபிப்பிராயப்படி அல்லது தேவைப்பாடு மிகையானது அல்லது பிழையானது என எண்பிக்கும் பொறுப்பு மேன்முறையீட்டாளர் மேலதாதல் வேண்டும்.

(6) சகல மேன்முறையீடுகளும் மறைவில் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(7) சபையானது, மேன்முறையீடு தொடர்பாக சான்றளிக்கக்கூடியவரென அது கருதக்கூடிய எவரேனும் ஆளை, விசாரணையில் சமுகமளிக்குமாறு கட்டளையிட்டழைப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன் சத்தியத்தின்மீது அல்லது வேறுவகையாக சாட்சிக்காரர் ஒருவராக அவரை விசாரிக்கலாம்; அத்துடன் அவ்வாறு சமுகமளிக்கும் எவரேனும் ஆள் அவ்வாறு சமுகமளிப்பதில் அவரால் அவசியமாக உறப்படக்கூடிய எவையேனும் நியாயமான செலவுகள் சபையினால் அனுமதிக்கப்படலாம்.

(8) சபையின் சம்மதத்துடன் தவிரவும் சபை தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய நியதிகளின்மீது தவிரவும், மேன்முறையிட்டாளர் சபையிலான விசாரணையில் ஆணையாளர் முன்னிலையில் காண்பிக்கப்படாத ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அல்லது ஆணையாளர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படாத எவரேனும் ஆளின் சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது ஆணையாளர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படாத எவரேனும் ஆளின் சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது எவருடைய சான்று ஆணையாளர் முன்னரான விசாரணையில் ஏற்கனவே பதியப்பட்டதோ அவருடைய சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(9) மேன்முறையீட்டின் விசாரணையில் சபையானது (8ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வாய்மூல அல்லது ஆவணச்சான்றை அனுமதிக்கலாம் அல்லது மறுக்கலாம்; அத்துடன் சான்றின் ஏல்தகவு தொடர்பிலான சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

(10) மேன்முறையீடுகளை விசாரித்தபின்னர், சபையானது விடயத்துக் கேற்றதுபோல மேன்முறையீட்டின்மீது ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான அல்லது 82ஆம் பிரிவின்கீழ் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவாறான வரிமதிப்பீட்டை உறுதிப்படுத்துதல், குறைத்தல், அதிகரித்தல் அல்லது நீக்குதல் வேண்டும். அல்லது அவ்விடயத்தை அதன்மீதான சபையின் அபிப்பிராயத்தோடு சேர்த்து ஆணையாளருக்கு அனுப்பிவைக்கலாம்; ஒரு வழக்கு அவ்வாறு சபையினால் அனுப்பப்பட்டவிடத்து, ஆணையாளர் சபையின் அபிப்பிராயம் தேவைப்படுத்தக்கூடியவாறாக வரிமதிப்பீட்டை மீளாய்வுசெய்தல் வேண்டும். சபையின் முடிவு மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(11) பத்தாம் உட்பிரிவின்கீழ் சபை அத்தகைய வரிமதிப்பீட்டைக் குறைக்காதுவிட்டால் அல்லது நீக்காதுவிட்டால் சபையானது, சபையின் செலவுகளை மேன்முறையீட்டாளரைச் செலுத்துமாறு கட்டளையிடலாம். ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு பணத்தொகை வரிமதிப்பீட்டின்மூலம் விதிக்கப்பட்ட வரியோடு சேர்க்கப்பட்டுஅதனோடு சேர்த்து அறவிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXVI

## மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மேன்முறையீடுகள்

சட்டப் பிரச்சினை பற்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தல்.

84. (1) சபையின் முடிவானது முற்றானதாதல் வேண்டும்:

ஆயின், மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்கென சட்டப்பிரச்சினை பற்றிய வழக்கமொன்றை எடுத்துரைக்கும்படி சபையைத் தேவைப்படுத்தி விண்ணப்பம் ஒன்றினைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பமானது சபையில் தீர்மானம் விடயத்திற்கேற்ப, ஆணையாளருக்கு அல்லது மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக எழுத்திலிடப்பட்டு, ஐம்பது ரூபாக் கட்டணத்துடன் சேர்ந்து சபையில் செயலதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலன்றி ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

(2) சபையினால் எடுத்துரைக்கப்பட்டவழக்கமானது நிகழ்வுகளையும் சபையின் முடிவையும், பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வை ஐயாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய வழக்கினை எடுத்துரைக்குமாறு சபையினைத் தேவைப்படுத்தும் திறத்தவர், அவ்வழக்கு எடுத்துரைக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டவுடன், அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் பதினன்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3)(அ) இப்பிரிவின்கீழ் எடுத்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்கின்மீது அல்லது அத்தகைய ஏதேனும் வழக்கின் கேட்பின்படிதீர்மானத்தின் அல்லது கையாளுதலின் இடைநேர்வினவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னர் இடம்பெறும் எல்லா நடவடிக்கைகளும், ஐயாயிரம் ரூபா பெறுமதியுள்ள அல்லது பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வையினதும் குற்றவிறுப்பினதும் தொகையென எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் சபையால் எடுத்துக் காண்பிக்கப்பட்டவாறான அத்தகைய அதிகமான தொகை பெறுமதியாகவுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், முன்னரான குடியியல் நடவடிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு எடுத்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கும், சபையிலுள் அதனோடு இணைக்கப்பட்ட புத்தகங்கள், ஆவணங்கள், பத்திரங்கள் எல்லாவற்றுடனும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கைகளிலான தனித்தவொரு காண்பொருளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) ஆணையாளர், அவர் மேன்முறையீட்டாளராக இருப்பின், பதவியின் பயனுள தொடர்ச்சி ஒன்றில் வழக்குத் தொடரும் ஓர் அரசாங்க அல்லது மேன்முறையீட்டில் அவர் எதிர்வாதியாக இருப்பின், பதவியின் பயனுள தொடர்ச்சி ஒன்றில் தமக்கெதிராக வழக்குத் தொடரப்பெற்ற ஓர் அரசாங்க அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எடுத்துரைக்கப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பும்போது அல்லது அதற்குமுன்னர், அதனைத் தேவைப்படுத்துபவரான திறத்தவர் மற்றத் திறத்தவருக்கு அவரது விண்ணப்பத்தின்பேரில் வழக்கொன்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது என அவருக்கு அறிவிக்கும் எழுத்திலான அறிவித்தலை அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், எடுத்துரைக்கப்பட்ட வழக்கு பிரதியொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) எடுத்துரைக்கப்பட்ட வழக்கொன்றினை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளில் எவரேனும் திருத்தம் செய்வதற்கெனச் சபைக்குத் திருப்பி அனுப்பச் செய்யலாம் என்பதுடன், அவ்வழக்கானது சபையினால் அதற்கிணங்கத் திருத்தப்படுதலும் வேண்டும்.

(6) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளில் எவரேனும் இருவர் அல்லது அதற்கு அதிகமானோர் எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் எழுகின்ற ஏதேனும் சட்டப்பிரச்சினையைக் கேட்டுத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய பிரச்சினையின்மீதான நீதிமன்றத்தின் முடிவுக்கு இணங்க, சபையின் தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம், எதிர்மாறாக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளின்மீது புதிய அல்லது மேலுமொரு கேட்புக்குக் கட்டளையிடலாம் அல்லது அதன்மீதான நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துடன் வழக்கைச் சபைக்குத் திருப்பியனுப்பலாம், வழக்கொன்று நீதிமன்றத்தினால் அவ்வாறு திருப்பியனுப்பப்படுமிடத்து, நீதிமன்றத்தின் அபிப் பிராயத்துக்கிணங்க,

விடயம் தேவைப்படுத்துகின்றவாறு சபையானது தனது முடிவை மீளாய்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னருள்ள நடவடிக்கைகள் எவற்றிலும் நீதிமன்றமானது, மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குச் செலவுத்தொகை சம்பந்தமாகவும், (1)ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகை சம்பந்தமாகவும் நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(8) ஆறும் உட்பிரிவின்கீழான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை எதற்கும் எதிராக ஆளையாளர் அல்லது வேறு எவரேனும் திறத்தவரோ உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதை இயலச்செய்யும் நோக்கங்களுக்காகவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல் தொடர்பில் உள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்திற்காகவும் –

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் (6)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதான கட்டளையொன்று அந்நீதிமன்றத்தினால் (7)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை ஒன்றுடன் சேர்ந்து, ஆளையாளருக்கும் அத்தகைய வேறு திறத்தவருக்கும் இடையே உள்ள குடியியல் வழக்கொன்றில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முற்றான தீர்பாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள விடயத்தின் பெறுமதியானது ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், குறித்துரைக்கப்பட்ட வழக்கில், பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வையின் தொகையென ஐயாயிரம் ரூபாவுக்கு அதிகமான ஒரு தொகையைச் சபையானது எடுத்துக்காட்டியிருக்குமிடத்து, அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள விடயத்தின் பெறுமதியானது, எடுத்துக்காண்பிக்கப்பட்ட அவ்வாறான உயர்ந்த தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணையாளருக்கு அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டு தொடர்பாக அத்தகைய எழுத்திலான சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டதான வைப்புத் தொகையைக் கட்டுமாறு அல்லது கட்டணம் எதனையும் செலுத்துமாறு அல்லது பிணைப்பொறுப்பு எதனையும் கொடுத்தருமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.

## அத்தியாயம் XXVII

### வரியை அறவிடல்

85.(1) இவ்வத்தியாயத்தில் "வரி" என்பது "மொத்த விற்பனை வரவு வரி", "முத்திரைத் தீர்வை" என்பவற்றையும் அத்தகைய மொத்த விற்பனை/வரவு வரியுடனும் முத்திரைத் தீர்வையுடனும் சேர்க்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையையும் அத்துடன் வேறேயேனும் குற்றப்பணங்கள், தண்டங்கள், கட்டணம் அல்லது இந்நியதிச்சட்டத்தின்கீழ் உறப்பட்ட எத்தன்மைத்தானதுமான செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.

(2) நாலாம் பிரிவின்கீழும் 57(1)(ஆ) என்னும் பிரிவின்கீழும் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலினால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரியானது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பதினோராம் பிரிவின்கீழும், 12ஆம் பிரிவின்கீழும் 57(1)(ஆ) என்னும் பிரிவின்கீழும் ஒவ்வொரு காலாண்டும் செலுத்தப்படற்பாலதான வரியானது, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அத்தகைய வரி கொடுப்பனவு செய்யப்படாத ஒவ்வொரு மாதத்திற்கும் வரியின் பத்து சதவீதத்திற்குத் தவணைதவறிய 2 வீதத்திற்குச் சமமான குற்றவிறுப்பொன்றுடன் சேர்த்து செலுத்தத் தவறியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வரியைச் செலுத்துவதற்கான ஆள் தவறுபவரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

ஆயினும், தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, செலுத்தத் தவறப்பட்டுள்ள வரியின்–ஐம்பது சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(4) மேன்முறையீடு எதுவும் எவ்வாறிருப்பினும், அத்தகைய மேன்முறையீட்டின்மீதான தீர்மானம் முடிவுறுதிருக்கையில் வரியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு நிறுத்திவைக்கப்படுதல் வேண்டுமென ஆணையாளர் கட்டளையிட்டாலன்றி, வரி செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளையின்மீது நிறுத்திவைக்கப்பட்ட தொகை செலுத்தத்தவறியதாகக் கருதப்படுதல் ஆகாது.

(5) மூன்றும் உட்பிரிவின்கீழ் நிறுத்திவைக்கப்பட்ட வரி அல்லது அதன் ஏதேனும் பாகம் அறவிடப்படமுடியாததாகவரும் சாத்தியமுள்ளதென அல்லது மேன்முறையீட்டாளர், அவரது மேன்முறையீட்டைத் தொடருவதை நியாயமற்றமுறையில் தாமதப்படுத்துகின்றார் என ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர், அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் என்பதுடன், வழக்குத் தேவைப்படுத்துவதாக அவருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய புதிய கட்டளையையும் ஆக்கலாம்; அத்துடன் அப்புதிய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்கின்ற ஏதேனும் வரியின் தொகை செலுத்தத்தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பாகத்தின்கீழான மேன்முறையீடொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன்மீது அல்லது ஆணையாளரினால் ஏதேனும் கட்டளை ஆக்கப்பட்டதன்மீது, (4)ஆம் உட்பிரிவின்கீழ் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஏதேனும் வரியானது செலுத்தப்படற்பாலதாக வருமிடத்து அல்லது அறிவித்தலொன்றின்கீழ் செலுத்தப்படற்பாலதாக வருமிடத்து, அல்லது அறிவித்தலொன்றின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரி அதிகரிக்கப்படுமிடத்து, ஆணையாளர், ஏதேனும் வரி அல்லது மிகுதி வரியோ எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டுமோ அந்தத் தேதியை நிர்ணயித்து மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவித்தலொன்றைக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய தேதிக்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் வரிசெலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

தீர்வையொன்று முதற்பொறுப்பாதல் வேண்டுமென்பது.

86. செலுத்தத் தவறியதான ஏதேனும் வரி செலுத்தத் தவறுபவரின் எல்லாச் சொத்துக்களின்மீதும் ஒரு முதற்பொறுப்பாதல் வேண்டும்:

ஆயின்,

(i) எண்பத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, சொத்தினைக் கைப்பற்றுவதற்கு முன்னராக பெறுமதிகொடுத்து, நன்னோக்கு கொள்வனவுகாரருக்கு, வரி செலுத்தத் தவறியவரினால் விற்கப்பட்ட சொத்துக்களுக்கு அத்தகைய பொறுப்பானது விரிவுபடுத்தப்படுதலோ அல்லது அவற்றைப் பாதிப்பதாதலோ ஆகாது; அத்துடன்

(ii) அசைவற்ற ஆதனம் தொடர்பில் செலுத்தத் தவறியிருக்கும் தொகையானது, பெறுமதிகொடுத்து நன்னோக்குடன் உருவாக்கப்பட்டதும், அத்தகைய கைப்பற்றுகைத் தேதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்டதுமான குத்தகை அல்லது பாரபந்தம் எதற்கும் முந்துரிமை பெற்றிருத்தல் ஆகாது.

தவறுபவருக்கெதிரான அறிவித்தல்.

87.(1) ஏதேனும் வரி செலுத்தத் தவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் இதனைத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் முறையில் அத்தகைய வரியை அறவிட முற்படுமுன்னர் –

(அ) அத்தகைய வரியின் விவரங்களையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரியை அறவடுவதற்கென நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உள்ளதென்றும்,

குறிப்பிட்டு, தவறுபவருக்கு எழுத்தில் அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய தவறுபவர், 57(1)(ஆ) என்னும் பிரிவின்கீழான ஏதேனும் அறிவித்தலுக்கெதிராக தகுந்த நேரத்துக்குள்ளாக மேன்முறையீடு செய்யாதுவிட்டிருந்தால், இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தற்றேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அவ்வாறு விதிக்கப்பட்ட தீர்வைக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாம் என்பதுடன், ஆணையாளர் அத்தகைய ஆட்சேபனைகளை சீர்தூக்கிப் பார்த்தலும் அதன் மீதான அவரது முடிவைக் கொடுத்தலும் வேண்டும். அத்துடன் அம்முடிவு முற்றானதாதல்வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும் 57(1)(ஆ)என்னும் பிரிவின்கீழான அறிவித்தலொன்றுக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டு, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரி கொடுப்பனவு ஆணையாளரால் கட்டளை மீது நிறுத்திவைக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த மேன்முறையீட்டுக் கேட்பின்போது மேன்முறையீட்டாளர் அந்த அறிக்கை தொடர்பில் குறித்தவொரு பணத்தொகை வரியாகப் போமதியாகவுள்ளதென அல்லது போமதியாகும் சாத்தியமுள்ளதென உடன்படுவாராயின் ஆணையாளர் மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் வழங்கும் அறிவித்தல்மூலம் அத்தகைய பணத்தொகையை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்துமாறு மேன்முறையீட்டாளரைப் பணிக்கலாம். அத்தகைய தேதிக்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் பணத்தொகை செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பாகத்தின்கீழான மேன்முறையொன்றினது இறுதித் தீர்மானத்தின்மீது செலுத்தத் தவறிய ஏதேனும் வரி குறைக்கப்படுமிடத்து, அத்தகைய வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான குற்றவிறுப்பு விகிதாசாரப்படி குறைக்கப்படுதல் வேண்டும்.

கைப்பற்றுதல் மூலமும், விற்பனையின் மூலமும் வரியை அறவிடுதல்.

88.(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென வரி சேகரிப்பாளர்களை ஆணையாளர் நியமிக்கலாம்.

(2) (அ) ஏதேனும் வரி செலுத்தத் தவறியதாக இருக்குமிடத்து, ஆணையாளர் அத்தகைய வரி பற்றிய விவரங்களும் தவறுபவரின் பெயரும் அடங்கிய சான்றிதழொன்றை ஓர் அரசாங்க அதிபருக்கு, பிசுக்காலுக்கு, பிரதிப் பிசுக்காலுக்கு, பிரதிப் பிசுக்காலுக்கு அல்லது வரி சேகரிப்பாளருக்கு வழங்கலாம். அத்துடன் அத்தகைய சான்றிதழ் எந்த அலுவலருக்கு வழங்கப்பட்டதோ அந்த அலுவலர் அச்சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள தவறுபவரிடமிருந்து, அவருடைய அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அவ்வரியை அறவிடச் செய்வதற்கு இத்தால் தத்துவம் பெறுகின்றார் என்பதுடன், தேவைப்படுத்தவும்படுகின்றார்.

(ஆ) அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகையானது, அந்நகைய அலுவலர் அது தொடர்பாக மிக உகந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பயனுறுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அசைவுள்ள ஆதனம் எதுவும் அத்தகைய அலுவலரினால் கைப்பற்றப்பட்டவுடன் உடனடியாக அத்தகைய ஆதனத்தின் நிரலொன்று தயாரிக்கப்பட்டு, அவரால் கையொப்பமிடப்பட்டு, தவறுபவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்று ஆணையாளருக்குக் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(இ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம்—

(i) இலங்கை நாணயத்திலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு செலுத்தத்தவறியுள்ள வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(ii) வெளிநாட்டு நாணயத்திலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு ராத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதிலிருந்து பெறப்படும் வருவாய்கள் செலுத்தத் தவறியுள்ள வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்;

(iii) காசு தவிர்ந்த ஆதனமாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனம் தவறுபவரது செலவுகளிலும் கட்டணங்களிலும் ஐந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவறுபவர் அந்த ஐந்து நாட்களுக்குள்ளாகச் செலுத்தத் தவறிய வரியைச் செலவுகளுடனும் கட்டணங்களுடனும் சேர்த்துச் செலுத்தாவிடில், அரசாங்க அதிபர், பிசுக்கால், பிரதிப்பிசுக்கால் அல்லது வரி சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏலவிற்பனைமூலம் விற்கச் செய்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆதனம் கைமாறத்தகு சாதனமொன்றாகவோ அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்திலுள்ள அல்லது பகிரங்கக் கம்பெனி

யிலுள்ள ஒரு பங்காகவோ இருக்குமிடத்து, அதனை அந் நாளிலுள்ள சந்தை வீதப்படி தரகர் ஒருவர்மூலமாக விற்கச் செய்வித்தல் வேண்டும்.

(ஈ) உட்பந்தி (iii) இல் குறிப்பிடுசெய்யப்பட்ட விற்பனையின்மூலம் தேறிப்பெறப்பட்ட பணத்தொகை–

(i) முதலாவதாக, அவ்வாதனத்தைக் கைப்பற்றுவதற்கான, வைத்திருப்பதற்கான, விற்பனை செய்வதற்கான செலவுகளையும் கட்டணங்களையும் செலுத்துவதற்கும்; அத்துடன்

(ii) இரண்டாவதாகச் செலுத்தத் தவறிய வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும்,

பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் மீதி, கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்கும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) கைப்பற்றுகை பயனுறுத்தப்படமுடியவில்லை என்பது எப்படியிருப்பினும், இப்பிரிவின்கீழ் தவறுதவறியவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதில் வரிசேகரிப்பாளரால் உறப்பட்ட நியாயமான செலவுகளை எவரேனும தவறுதவறியவரிடமிருந்து அறவிடுதல் வரிசேகரிப்பாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும். காசு கைப்பற்றப்பட்டவிடத்து, அவ்வாறு கைப்பற்றிய காசிலிருந்து அத்தகைய நியாயமான செலவுகள் எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வரி செலுத்தத் தவறியிருக்குமிடத்தும், அத்துடன் (2)ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட வழிமுறையில் அதனை அறவிடுதல் செயற்படுத்தப்படற்பாலதல்லவென அல்லது உகந்ததல்லதென ஆணையாளர், அபிப்பிராயப்படுமிடத்தும், அவர், அத்தகைய வரி பற்றிய விபரங்களும் அவ்வரி எந்த ஆளிரல் அல்லது ஆட்களிரல் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரும் அல்லது பெயர்களும் அடங்கிய சான்றிதழொன்றை தவறுபவர் வதிகின்ற அல்லது தவறுபவருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்திருக்கின்ற ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றமொன்றிற்கு வழங்கலாம்; அத்துடன் அதன்மேல் அந்நீதிமன்றமானது,

தவறுபவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் அல்லது எதனையும் அல்லது வரியை அறவிடுவதற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அதன் அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்வதற்கு அதிகாரமளித்தும், தேவைப்படுத்தியும் நிறைவேற்றெழுத்தாணையொன்றைப் பிசுக்காலுக்கு வழங்குவதற்குப் பணித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 221முதல் 297 வரையிலான பிரிவுகளினது ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "அசைவுள்ள ஆதனம்" என்பது பொறித்தொகுதியையும் எந்திரசாதனத்தையும் உள்ளடக்கும்.

(5) ஆணையாளர், இப்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்கும்போதெல்லாம் அதுபற்றிய அறிவிப்பொன்றினை நேரில் சேர்ப்பித்தல்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுக்கடிதத்தின்மூலம் அல்லது தந்திமூலம் தவறுபவருக்கு அவர் வதிவுள்ளவராயினுஞ்சரி, வதிவற்றவராயினுஞ்சரி, உடனடியாக வழங்குதல் வேண்டும். ஆயினும், அத்தகைய அறிவிப்பு, தவறுபவருக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக இச்சட்டத்தின்கீழான நடவடிக்கை செல்லுபடியற்றதாதல் ஆகாது.

நீதிவான் முன்னிலையில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள்.

89.(1) ஏதேனும் விடயத்தில், செலுத்தத்தவறிய வரியை, கைப்பற்றுகையின்மூலமும் விற்பனையின் மூலமும் அறவிடுவது செயற்படுத்தப்படற்பாலதான அல்லது உகந்ததல்லஎன ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது கைப்பற்றுகையின் மூலமும் விற்பனையின்மூலமும் முழுவரியையும் அறவிடப்பட்டிராதவிடத்து, அவர் அத்தகைய வரி பற்றிய விபரங்களும் தவறுபவரின் பெயர்; அவர் கடைசியாக வசித்துவந்ததாக அறியப்படும். இடம் என்பன பற்றிய விபரங்களும் அடங்கியசான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானொருவருக்கு வழங்கலாம்.

அதன்மேல்அந்நீதிவான், தீ வரியை அறவிடுவதற்கென தவறுபவருக்
கெதிராக ஏன் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாதென்பதற்குக்
காரணம் காண்பிக்குமாறு கோரி அந்தவறுபவரைத் தம்முன் கட்டளை
விட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், அவர் போதிய, காரணம் காட்டத்
தவறும்பட்சத்தில், செலுத்தத்தவறிய வரியானது, குற்றப்பணத்தினால்
மட்டும் தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்
படற்பாலதல்லாத தவறொன்றுக்கு அத்தகைய தவறுபவரின்மீது நீதிவானின்
தண்டனைத் தீர்ப்பினால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணமாகக் கருதப்படுதல்
வேண்டும். அத்துடன் அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பண
மொன்றின் கொடுப்பனவைச் செலுத்தத்தவறுதலின் தொடர்பில், 1979ஆம்
ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச்
சட்டத்தின் 291ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அதன் (அ), (ஈ), (ஐ)
என்னும் பந்திகள் தவிர்ந்த, ஏற்பாடுகள் அதன்மீது ஏற்புடையனவாதல்
வேண்டும்; அத்துடன் நீதிவான் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில்
அவ்வுட்பிரிவினது ஏற்பாடுகளின்மூலம் அவர் விடுத்திருக்கக்கூடிய பணிப்பு எதனை
யும் விடுக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் வழங்கப்
பட்ட சான்றிதழொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மை இப்பிரிவின்கீழான
எவையேனும் நடவடிக்கைகளின்போது நீதிவானால் கேள்விக்குட்படுத்தப்படுதலோ
பரிசீலனை செய்யப்படுதலோ ஆகாது; அத்துடன் அதற்கிணங்க, அவ்வுட்
பிரிவிலுள்ள எதுவும் அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைச்
சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு நீதிவானுக்கு அதிகார
மளிப்பதாக வாசிக்கவும் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின்
15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்
தின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளிலுள்ள எதுவும், இப்பிரிவின்
(1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் ஏதேனும் விடயத்தில் ஏற்புடைய
தாதல் ஆகாது.

(4) தவறுபவர்மீது விதிக்கப்பட்டதென (1)ஆம் உட்பிரிவினால் கருதப்பட்டதான குற்றப்பணக் கொடுப்பனவைச் செலுத்தத் தவறியமைக்கு தவறுபவருக்கு மறியற்றண்டனைத் தீர்புப அளிக்கப்படுகின்றதும், அவ்வுட் பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றதுமான ஏதேனும் விடயத்தில் நதிவான் அக்குற்றப்பணத்தொகையைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை அனுமதிக்கலாம் அல்லது அத்தொகை தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(5) ஒராமுட்பிரிவின் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதன்கீழ் காரணம் காட்டுவதற்கு அல்லது (4)ஆம் உட்பிரிவின் கீழ் குற்றப்பணக் கொடுப்பனவிற்கு கால அவகாசம் அளிப்பதற்கான முன் நிபந்தனையாகப் பிணை கொடுக்கப் படவேண்டுமென நீதிமன்றம் தேவைப்படுத்தலாம். அத்துடன் தவறுபவர் அவ் வாறு பிணை கொடுக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட் சட்டத்தின், அத்தியாயம் என்பதன்ற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) கொடுப்பனவொன்று தவணை அடிப்படையில் செலுத்தப்பட வேண்டுமென (4)ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவர் பணிக்குமிடத்தும், அத்துடன் ஏதேனும் ஒரு தவணைப்பணக்கொடுப்பனவு தவணை தவறுமிடத்தும், அப்போது செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப் பணங் களினதும் கொடுப்பனவு தவணை தவறப்பட்டுள்ளது என்றுபோன்று நடவடிக் கைகள் எடுக்கப்படலாம்.

(7) ஒராமுட்பிரிவின்கீழான எவையேனும் நடவடிக்கைகளில் தீர்வை செலுத்தப்படவேண்டுமென உரியமுறையில் தேவைப்படுத்தப்பட்டுள்ளது, என் பதற்கும் அது தவணை தவறியுள்ளது என்பதற்கும் ஆணையாளரின் சான்றிதழ் போதிய சான்றாதல் வேண்டும் என்பதுடன், தொகை மிகையானது, செம்மை யற்றது அல்லது மேன்முறையீட்டின் கீழுள்ளது என்னும் வழக்குரையெதுவும் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

90. (1) எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரி செலுத்தத் தவறியிருக்குமிடத்தும் அத்துடன், எவரேனும் ஆள்-

(அ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்த வேண்டியுள்ளாரென அல்லது செலுத்தவுள்ளாரென; அல்லது

(ஆ) தவறுபவருக்காக அல்லது அவரது முகவருக்காக அல்லது தவறுபவரின் அல்லது அவரது முகவரின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றாரென; அல்லது

(இ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்குக் கொடுப்பனவு செய்வதற்காக வேறெவரேனும் ஆளின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றாரென; அல்லது

(ஈ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்தவதற்காக வேறெவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளாரென;

நம்புவதற்கிடமுண்டு என ஆணையாளருக்குத் தோன்றுமிடத்தும், அறிவித்தலில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்குச் செலுத்தத் தவறிய வரியின் தொகையை விஞ்சாத அத்தகைய எவையேனும் பணங்களைச் செலுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலொன்றை (அதன் பிரதியொன்று தவறுபவருக்கு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்; ஆணையாளர் அவ்வாளுக்கு வழங்கலாம். அவ்வறிவித்தலானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறும் தேதியில் அவரிடமுள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியின் பின்னர் மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக எக்காலத்திலேனும் அவருக்குக் கிடைத்துள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அவரால் செலுத்தப்படவுள்ள அத்தகைய எல்லாப் பணங்களுக்கும் ஏற்புடையவாதல் வேண்டும்.

(2) இப்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனும் ஆள், தவறுபவரினதும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின்கீழ் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பாக

எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ,த்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவுப்படுகின்றார்.

(3) ஒராமுட்பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணங்கள் அவருக்குக் கிடைத்காத காரணத்தினால் அல்லது அத்தகைய பணங்கள் எதுவும் அவ்வுட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட அக்காலப்பகுதிக்குள்ளாக அவரிடமிருந்து வருமதியாகாத காரணத்தினால் அவ்வறிவித்தலுக்கு இணங்கியொழுக இயலாதிருக்கும் ஆளெவரும் அது முடிவடைந்த பின்னர், பதினன்கு நாட்களுக்குள்ளாக அந்நிகழ்வுபற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்து எழுத்திலான அறிவித்தல் கொடுத்தலவேண்டும்.

(4) ஒராமுட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆள் அதற்கு இணங்கியொழுக இயலாதவராக இருப்பதுடன், (3)ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு ஆணையாளருக்கு அறிவித்தல் கொடுக்கவும் தவறியுள்ளவிடத்து, அல்லது அத்தகைய ஆள் அவ்வறிவித்தல் தொடர்புறும் தீர்வையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் செலுத்தக்கூடியவராயிருந்தும், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்ததன்பின்னர் பதினன்கு நாட்களுக்குள், ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அறிவித்தலினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய வரியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் செலுத்தியில்லாதவிடத்தும், அத்தகைய ஆள் தனியாள் ஒருவராகவிருப்பின் அத்தகைய தனியாள், அல்லது அத்தகைய ஆள், கூட்டி உணக்கப்பட்ட அல்லது கூட்டி உணக்கப்படாத கம்பெனியொன்றக அல்லது ஆட்கள் குழுவொன்றக இருப்பின் அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர் அவ்வாளினால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரி முழுவதற்கும் தாமே பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து, இச்சட்டத்திலேற்பாடுசெய்யப்பட்ட எல்லா வழிமுறைகளாலும் அறவிடவும்படலாம்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறுபவர்" என்னும் சொல்லமைப்பு, செலுத்தத் தவறிய ஆளொருவரின் முகவரையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகள், எவரேனும் ஆள் உயிருடனிருந்திருப்பின் அவரால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடிய, செலுத்தத் தவறிய தீர்வையின் ஏதேனும் விடயத்தில் அவ்வேற்பாடுகளினது ஏற்புடைமையின் நோக்கங்களுக்கென (1)ஆம் உட்பிரிவில் "தவறுபவர்" என்னும் சொல்லமைப்பு-

(அ) இறந்த ஆளொருவரின் மரணசாதன நிறைவேற்றுநர் அல்லது மரணச்சொத்து நிருவாகி; அல்லது

(ஆ) இறந்த ஆளொருவரின் ஆதனத்தை உடைமையில் எடுக்கின்ற அல்லது அவ்வாதனத்தில் தலையிடுகின்ற எவரேனும் ஆள்; அல்லது

(இ) இறந்த ஆளொருவரது மரணச்சொத்து தொடர்பாக மரணசாதன தத்துவப்பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்காக அல்லது மீள இலச்சினையிடப்பெறுவதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருக்கின்ற அல்லது விண்ணப்பிப்பதற்கு உரித்துடைய எவரேனும் ஆள்,

எனப் பொருளாகும்.

91. (1) எவரேனும் ஆள், அவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வரியின் தொகையைச் செலுத்தாமல் இலங்கையை விட்டுச்செல்ல இருக்கின்றார் அல்லது செல்லக்கூடிய சாத்தியம் உள்ளது என ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர் அத்தகைய தொகையையும், அத்தகைய ஆளின் பெயரும் பற்றிய விபரங்களடங்கிய சான்றிதழொன்றை நீதிவானொருவருக்கு வழங்கலாம். நீதிவான் அதனைப் பெற்றுக்கொண்டதன்பேரில் அத்தகைய ஆள் அத்தொகையைச் செலுத்தாமல் அல்லது அதன் கொடுப்பனவுக்கு ஆணையாளர் திருப்தியுறும்வகையில் பிணைப்பொறுப்பு வழங்காமல் இலங்கையை விட்டுச்செல்வதைத் தடைசெய்யுமாறு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர், அவரது சான்றிதழை நீதிவானுக்கு வழங்கும் நேரத்தில் அதனைப்பற்றிய அறிவிப்பொன்றை நேரடியாகச் சேர்ப்பிப்பதன்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுத்தபால்மூலம் அல்லது தந்திமூலம் அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்; ஆனால் அத்தகைய அறிவிப்பு எதுவும் அத்தகைய ஆளுக்குக் கிடைக்கப்பெறாமையானது இந்நியதிச் சட்டத்தின்கீழான நடவடிக்கைகளை செல்லுபடியற்றவையாக்குதல் ஆகாது.

(3) தொகை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது பிணைப்பொறுப்புக் கொடுத்துதவப்பட்டுள்ளதென அல்லது அத்தொகை பொலிசு நிலையமொன்றிற்குப் பொறுப்பாயுள்ள பொலிசு அலுவலரொருவருக்குச் செலுத்தப் பட்டுள்ளதெனக் கூறுகின்றதும் ஆணையாளருக்குக் கையொப்பமிடப்பட்டதுமான சான்றிதழொன்றை முன்வைத்தலானது, அத்தகைய ஆளை இலங்கையை விட்டுச்செல்ல அனுமதிப்பதற்குப் போதுமான அதிகாரமாதல் வேண்டும். ஏதேனும் தீர்வைத் தொகை எந்தப் பொலிசு அலுவலருக்குச் செலுத்தப் பட்டதோ அந்தப் பொலிசு அலுவலர் எவரும் அத்தகைய தொகையை உடனயாக ஆணையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

92. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் எவற்றினதும் ஏற்புடைமையானது, இந்நியதிச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான வரி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினதும் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு தவறிவிட்டது அல்லது தவறும் சாத்தியம் கொண்டுள்ளது என ஆணையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, 29ஆம் பிரிவின்கீழ் நீதிவானொருவரால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுப் பயனுறுத்தப்பட்டுள்ளதென்பது எவ்வாறிருப்பினும், செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் ஏதேனும் பணத்தொகையை இவ்வத்தியாயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் அறவிட்டு வழிமுறைகளில் அறவிடமுற்படும் ஆணையாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

93. ஆணையாளர் எவரேனும், ஆளுக்கு எழுத்தில் வழங்கப்படும் அறிவித்தல்மூலம் அத்தகைய அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக, அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் வரியை அறவிடும் நோக்கங்களுக்கு ஆணையாளர் தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய தகவலைக்

கொடுத்துதவுமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

பாகம் 4

அத்தியாயம் XXVIII

மதுவரி வருவாய்

94. மாகாணத்தில் செலுத்தப்படும் அல்லது சேகரிக்கப்படும் (திருத்தப்பட்டவாறான) 1912ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, மதுவரிக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அறவிடப்படும் அல்லது விதிக்கப்படும் வாடகைகள், மதுச்சீவும் உரிமக் கட்டணங்கள், மற்றும் போதையூட்டும் மதுபானங்களின் உடைமை, கடத்தல், கொள்வனை மற்றும் விற்பனைமீதான மதுபான உரிமக் கட்டணங்கள் உட்பட, சகல கட்டணங்களும் (திருத்தப்பட்டவாறான) மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்துக்கிணங்கச் சேகரிக்கப்பட்டு மாகாணத்தில் மாகாண நிதியத்தின் வரவுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

95. மாகாண அரசிறை ஆணையாளர் அல்லது வரிமதிப்பீட்டாளர் பதவிநிலைக்குக் குறையாதவரும் ஆணையாளரால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவருமான ஓர் அலுவலர் உரிமக்கட்டணங்கள் அல்லது வாடகைகள் அறவிடுதல் தொடர்பிலான ஏதேனும் விடயத்தைச் சரிபிழை பார்க்கும் நோக்கத்துக்கா, எழுத்திலான கட்டளைமூலம், எவரேனும் தவறனை வாடகைக்கெடுத்தவரை அல்லது மதுபானத்தைக் கடத்துதல், உடைமையில் வைத்திருத்தல், கொள்வனைசெய்தல் அல்லது சில்லறை விற்பனை செய்தல் எப்பவற்றில் ஈடுபட்டுள்ள மதுபான உரிமம்பெற்றவரை, அத்தகைய அலுவலரால் பார்வையிடப்படுவதற்கென கணக்குப்புத்தகங்கள், இடாப்புகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் முதலியவற்றைத் தேவைப்படுத்தலாம்.

பாகம் 5

## அத்தியாயம் XXIX

### லொத்தர்கள்

லொத்தர் வரி.

96. (1) இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய லொத்தர் அல்லது ஒரு லொத்தர் தவிர்ந்த, ஏதேனும் சட்டத்துக்கிணங்க................மாகாணத்தில் நடாத்தப்படும் ஏதேனும் லொத்தர் தொடர்பில், அத்தகைய ஒவ்வொரு லொத்தரின் மொத்த விற்பனை வரும்படிகள்மீது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான வரியொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒராமுட்பிரிவின்கீழாக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வலுவுடையதாக வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மா மாதத்துக்குள்ளாக மாகாணசபை முன்னர் கொணரப்படுதல் வேண்டும் அல்லது சபையின் கூட்டமெதுவும் அத்தகைய காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்வில்லையாயின் அத்தகைய காலப்பகுதி முடிவில் நடாத்தப்படும் முதலாவது கூட்டத்தில் சபையினால் அங்கீகரிக்கப்படுவதற்கெனக் கொணரப்படுதல் வேண்டும்.

(3) சபை அங்கீகரிக்க மறுக்கின்ற கட்டளை எதுவும், அவ்வாறு மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் செய்யப்பட்ட எதனையும் செல்லுபடிக்குப் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை நீக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் லொத்தர் என்பது லொத்தர் தன்மைத்தான ஏதேனும் பொறுப்புமுயற்சியையும் உள்ளடக்கும்.

வரிக் கொடுப்பனவு.

97.(1) தொண்ணூற்றாறாம் (1) பிரிவின்கீழ் விதிக்கப்படும் ஏதேனும் வரி லொத்தர் குலுக்குவிப்பாளரால் அல்லது குலுக்குவிப்பவர்களால் மாகாண அரசிறை ஆணையாளருக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அத்தகைய வரி செலுத்தப்படவில்லையாயின், அது மாகாணசபைக்குச் செலுமதியான ஒரு கடனாக குலுக்குநரிடமிருந்து அல்லது குலுக்குநர்களிடமிருந்து அறவிடப்படலாம்.

(2) குலுக்குநர் அல்லது குலுக்குநர்கள் வரியைச் செலுத்தாதவிடத்து, அவர் அல்லது அவர்கள் நியதிச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோர் ஆளும் நீதிவான் முன்னரான சுருக்கவிசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் 6

## அத்தியாயம் XXX

## மோட்டார் வாகனங்கள்

98. இலங்கைப் பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்ட (திருத்தப்பட்டவாறான இலங்கைச் சட்டவாக்கங்களின் 203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் பெறுவதற்கு உரித்துடைய அதிகாரியினால் மாகாணத்தில் செலுத்தப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட, அச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அல்லது அறவிடப்பட்ட எவையேனும் இறுப்பனவுகளுடன்சேர, உரிமக்கட்டணங்கள் உட்பட, சகல கட்டணங்களும் அத்தகைய வேறு எவரேனும் அதிகாரியினால் சேகரிக்கப்பட்டு அத்தகைய அதிகாரியினால் மாகாணத்தின் மாகாண நிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்கென அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

பாகம் 7

அத்தியாயம் XXXI

நீதிமன்றக் குற்றப்பணங்கள்

நீதிமன்றக் குற்றப்பணங்கள்.

99. மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட நியதிச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் மாகாணத்துக்குள்ளாக நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு நீதிமன்றத்துக்குச் செலுத்தப்பட்ட, எல்லாக் குற்றப்பணங்களும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய குற்றப்பணத்திலிருந்து செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பில் நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் பணிப்புக்கு அமைவாக, மாகாணத்தின் மாகாண நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

பாகம் 8

அத்தியாயம் XXXIII

பொது

அறிவித்தலிலுள்ள கையொப்பமும் அதனைச் சேர்ப்பித்தலும்.

100. (1) இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படவேண்டிய அறிவித்தல் ஒவ்வொன்றும் விடயத்துக்கேற்றபோல ஆணையாளரின் அல்லது பிரதி ஆணையாளரின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது மாகாண ஆணையாளரின் அல்லது பிரதி மாகாண ஆணையாளரின் அல்லது மாகாண வரிமதிப்பீட்டாளரின் பெயர் உரியமுறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் செல்லுபடியுடையவையாதலும் வேண்டும்.

(2) இந்நியதிச்சட்டத்தின் பயனைக்கொண்டு வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஆளொருவருக்கு நேரடியாக அல்லது கடைசியாக அறிவி அறியப்பட்ட அவரது வதிவிடத்திற்காவது அல்லது அவர் தொழில் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்திய ஏதேனும் இடத்திற்காவது

ஒப்படைப்பதன்மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்:

ஆயின், 13ஆம் அல்லது 14ஆம் பிரிவின்கீழான வரிமதிப்பீட்டு அறிவித்தல் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் இடத்துக்குப் பதிவஞ்சல்மூலம் தபாலில் அனுப்பிவைக்கப்படுவதன்மூலம் அல்லது நேரடியாகச் சேர்ப்பிப்பதன்மூலம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும், சாதாரண நெறியில் அஞ்சல்மூலம் அது எந்த நாளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமோ அந்த நாளை அடுத்துவரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்பட்டதை எண்பிக்கையில் அறிவித்தலை உள்ளடக்கிய கடிதம் உரியமுறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலிடப்பட்டதென்பதனை எண்பிப்பது போதுமானதாதல் வேண்டும்.

(5) இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்கென, கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின்மீது அச்சிடப்பட்டிருப்பதாக அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அல்லது ஏதேனும் சான்றிதழின்மீது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அதனைக் கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயராகக் கொள்ளப்பட்டதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறைக் கவனத்துக்குட்பட்டதாதல் வேண்டும்.

தவறுதலாகச் செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு.

101. (1) ஆளெவரும் அவரால் தக்கவாறு செலுத்தப்படற்பாலதான தொகையைவிட மிகையாக ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தியுள்ளாரென இசைவிணக்கம் மூலமோ வேறு வகையிலோ செய்யப்பட்டதான ஏதேனும் முத்திரைத் தீர்வையின் அல்லது குற்றவிறுப்பின் கொடுப்பனவுத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள் எழுத்தில் முறைப்படி செய்யப்பட்டஉரிமைக்கோரிக்கையிலு ஆணையாளர் திருப்திப்படும்வகையில் எண்பிக்கப்படுமாயின், அத்தகைய ஆள் அவ்வாறு மிகையாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஆளெவரும் அவரால் ஒருகாலாண்டுக்காகச் செலுத்தப் படற்பாலதான தொகையைவிட மிகையாக ஏதேனும் மொத்தவிற்பனை வரவுவரியை செலுத்தியுள்ளாரென அக்காலாண்டு முடிவிலிருந்து ஓராண்டிற்குள் எழுத்தில் முறைப்படி செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கையினால் ஆணையாளர் திருப்தியுறும்வகையில் மெய்ப்பிக்கப்பட்டால், அத்தகைய ஆள் அவ்வாறு மிகையாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், வேறேதேனும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டிற்கான அல்லது மீளக்கொடுப்பனவுக்கான ஏதேனும் காலவரையறையை நீடிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அல்லது வேறுவகையில் செல்லுபடியற்றதாகவுள்ள ஏதேனும் ஆட்சேபனையை அல்லது மேன்முறையீட்டைச் செல்லுபடியுள்ளதாக்குவதற்கு அல்லது இறுதியானதும் முடிவானதுமான ஏதேனும் விடயத்தை மீளாய்வுசெய்வதற்கான அதிகாரமளிப்பதற்கு தொழிற்படுத்தப்படுதலாகாது.

(4) ஏதேனும் பணத்தொகை 12ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்டிருந்தால் அவர் செலுத்தியிருக்க வேண்டியதான அத்தகைய பணத்தொகையிலும் கூடுதலாக 12ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகையை செலுத்தியுள்ளாரென எழுத்தில் முறையாகச் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையினால் ஆணையாளர் திருப்தியுறும்வரையில் மெய்ப்பிக்கப்பட்டால், அவ்வாறு செலுத்தப்பட்டதிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அத்தகைய கோரிக்கை செய்யப்பட்டால், அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை
கப்பெறுவதற்
மீளக்/கு அத்தகைய ஆள் உரித்துடையவராதல் வேண்டும்.

அலுவலக இரகசியம்.

102. (1) இந்நியதிச்சட்டத்திற்கீழான தமது கடமைகளைப் புரியும்போது தவிர, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்துவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது எவரேனும் ஆள் கொண்டுநடாத்துவதில் உதவிபுரிகின்ற ஒவ்வோர் ஆளும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எவரேனும் ஆளின் அலுவல்கள் தொடர்பிலா

எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் பேணுவதில் உதவிபுரிதலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய கருமம் எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆள், அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது அமைச்சர் அல்லது நிதி அமைச்சின் செயலாளர் தவிர்ந்த வேறு ஆள் எவருக்கும் அக்கருமத்தைத் தெரிவித்தல் ஆகாது, அல்லது ஆணையாளரின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் பதிவேடுகளை எவரேனும் ஆள் பார்வையிடவிடுதல் அல்லது அனுமதித்தல் ஆகாது.

(2) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வோர் ஆளும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் செயலாற்றமுன்னர், அத்துடன் அமைச்சரும் நிதி அமைச்சுச் செயலாளரும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் செயலாற்ற முன்னர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இரகசியம் பேணுதற்கான சத்தியத்தைச் சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையில் எடுத்து கைமொப்பமிடுதல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் எவரும், ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் விவரத்திரட்டை, ஆவணத்தை அல்லது வரிமதிப்பீட்டைக் காண்பிக்குமாறு அல்லது இந்நியதிச்சட்டத்தின் அல்லது ஆணையாளரால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறுள்ள அளவுக்குத் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு வரக்கூடிய ஏதேனும் கருமத்தை அல்லது விடயத்தை நீதிமன்றத்தில் வெளியிடுமாறு அல்லது நீதிமன்றத்துக்குத் தெரிவிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ள எது எப்படியிருப்பினும், மாகாண அரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் இந்நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணையாளரால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்குள் வரக்கூடிய ஏதேனும் கருமத்தை, எத்திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலருக்கு, இந்நியதிச்சட்டத்தின் அல்லது அத்தகைய எழுத்திலான வேறு

ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் கடமையைப் புரிவதற்கு அவ்வாறு தெரிவிப்பது அவசியமானால், ஆவணங்களை எண்பித்தல் தொடர்பாகச் சான்றுக் கட்டளைச்சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், இந் நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது அவரால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு சட்டத்தின்கீழ் அவரால் பெறப்பட்ட அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள எவையேனும் விபரங்களின் பிரதியொன்றை அவ்விவரங்களின் சரியான பிரதியென அவரால் அல்லது அவரது சார்பில் அத்தாட்சிபண்ணி, ஆணையாளர் இந் நியதிச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்:

ஆயின், ஆணையாளர், ஏதேனும் விவரத்திரட்டை அல்லது ஆவணத்தை எழுதிய, ஆக்கிய, ஒப்பமிட்ட அல்லது கொடுத்துதவிய ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை அல்லது ஆளை எண்பிக்கவேண்டியது அவசியமான ஏதேனும் விடயத்தில் அத்தகைய ஏதேனும் விவரத்திரட்டின் அல்லது ஆவணத்தின் மூலப்பிரதியைக் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்:

ஆயின், மேலும், ஆணையாளர் எவ்விடயத்திலும், ஏதேனும் நீதிமன்றத்தில் அத்தகைய ஆவணத்தின் அல்லது விவரத்திரட்டின் மூலப்பிரதியை அல்லது அத்தகைய ஆவணத்தில் அல்லது விவரத்திரட்டில் அடங்கியுள்ள விவரங்களின் பிரதியொன்றைக் காண்பிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(5) இப்பிரிவில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், ஆணையாளர் கணக்காய்வாளர் தலைமையதிபதியை அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்திணைக்களத்தின் எவரேனும் அலுவலரை, அவரது அலுவலகக் கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங்களை அறுகிப்பார்வையிட அனுமதித்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது இவ்வுட்பிரிவின்கீழ் அவரால் அதிகாரமளிக்கப்படும்

எவரேனும் அலுவலர் (2)ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலமர்த்தப்பட்டுள்ள ஆள் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

படிவங்களும் கொடுக்கல் வாங்கல்கள் இடாப்பும்.

103. ஆணையாளர் காலத்துக்குக்காலம் இந்நியதிச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்காகவும் அல்லது அந்நோக்கங்களுள் எதற்காகவும் பயன் படுத்தப்படவேண்டிய படிவங்களையும் கொடுக்கல் வாங்கல் இடாப்பையும் விதித்துரைக்கலாம். அவ்வாறுவிதித்துரைக்கப்பட்ட ஏதேனும் படிவம் அல்லது கொடுக்கல் வாங்கல் இடாப்பு காலத்துக்குக்காலம் ஆணையாளரால் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம் அல்லது அவ்வாறு விதித் துரைக்கப்பட்ட எவையேனும் படிவங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல் இடாபபுகளுக்குப் பதிலாக ஆணையாளரால் வேறு சில படிவங்கள் அல்லது கொடுக்கல் வாங்கல் இடாப்புகள் இடப்படலாம்.

அத்தியாயம் XXXIII

நிருவாகம்

அலுவலர்கள்.

104. (1) ஆணையாளர் இந்நியதிச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தினால் ஆணையாளரால் அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஆணையாளர் வரிமதிப்பீட்டாள ரொருவருக்கு அதிகாரமளிக்கலாம்.

(3) இந்நியதிச்சட்டத்தில் ஏதேனும் ஏற்பாட்டினால் ஆணையாள ருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை, அல்லது பணியை பிரயோகிக்கின்ற, புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற வரிமதிப்பீட்டாளர் ஒருவர், முரணானது எண்பிக்கப்படும்வரை எல்லா நோக்கங்களுக்கும் அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) இந்நியதிச்சட்டத்தினால் வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட, அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை, அல்லது பணியை ஆணையாள

105. பிரிவு ~~78(8)~~ 73(8) என்பதன் கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

பொருத்தமுறைவொழிய –

"ஒட்டு முத்திரை" என்பது ஒட்டக்கூடியதும் அதுதொடர்பில் அது தொடர்பில் ~~67(1)~~ 76(1) ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கின்றதுமான முத்திரை என்று பொருள்படும்;

"முகவர்" என்பது வேறு எவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் தொழிலின் பண்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமையைக் கொண்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்;

"வரிமதிப்பீட்டாளர்" என்பது, மாகாண வரிமதிப்பீட்டாளர் ஒருவர் என்று பொருள்படும் என்பதுடன், அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பது

(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவரின் சார்பில் செயலாற்றவென அவ்வாளினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும் –

(அ) ஏதேனும் விடயத்தில் –

(i) இலங்கை வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றவரும்;

(ii) ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவராக இருக்கின்றவரும்;

(iii) சட்டத்தரணி ஒருவராக இருக்கின்றவரும்; அல்லது

( ) அவ்வாறினால் கிரமமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர் ஒருவராக இருக்கின்றவரும்; அல்லது

(ஆ) தனியாள் ஒருவரின் விடயத்தில், உறவினர் ஒருவராக இருக்கின்றவரும்;

(இ) கம்பெனியொன்றின் விடயத்தில், அக்கம்பெனியின் பணிப்பாளரொருவராக அல்லது செயலாளராக இருக்கின்றவரும்;

(ஈ) பங்காண்மையொன்றின் விடயத்தில், அப்பங்காண்மையின் பங்காளர் ஒருவராக இருக்கின்றவரும்;

(உ) ஆட்கள் குழு ஒன்றின் விடயத்தில் அக்குழுவின் உறுப்பினரொருவராக இருக்கின்றவரும்,

ஆன எவரேனும் தனியாள் என்று; அல்லது

(2) கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் ஒரு கணக்காய்வாளராகப் பதிவுசெய்யப்பட்ட தனியாள் ஒருவராகவும் அதிகாரமளிக்கும் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவர் சார்பில் செயலாற்றுவதை அவ்வாறினால் காலத்துக்குக் காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவராகவும் இருக்கின்ற எவரேனும் தனியாள் என்று பொருள்படும்;

"வங்கித்தொழில் நிறுவனம்" என்பது, பணச்சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"ஆட்கள் குழு" என்பது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு, ஏதேனும் சகோதரத்துவ இணையுரிமை, அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் கழகம் அல்லது சங்கம் அல்லது ஏதேனும் பங்குடைமை என்று பொருளாகும்;

"வியாபாரம்" என்பது, ஏதேனும் வியாபார பொருளை அல்லது பொருளைமொத்த விற்பனை மூலமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்றல் என்று பொருளாகும். ஆனால் உற்பத்தியாளர் ஒருவரினாலான விற்பனையை உள்ளடக்காது;

"விதிக்கப்படற்பாலது" என்பது, இந்நியதிச்சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் எழுதிநிறைவேற்றப்பட்ட அல்லது முதன்முதலாக எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலது என்று பொருள்படும்;

"காசோலை" என்பது குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றில் வரையப்பட்டதும், கோரப்பட்டதன்மீதல்லாத வேறுவகையில் செலுத்தப்படற்பாலது என எடுத்தியம்பாததுமான ஒரு மாற்றுண்டியல் என்று பொருள்படும்;

"ஆணையாளர் அல்லது மாகாண ஆணையாளர்" என்பது, மாகாண உண்ணாட்டரசிறை ஆணையாளர் என்று பொருள்படும் என்பதுடன், இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்டவரும், பொதுவாகவாயினுஞ்சரி ஆணையாளரினால் அவர்சார்பில் செயலாற்றவென அதிகாரமளிக்கப்பட்டவருமான பிரதி உண்ணாட்டரசிறை ஆணையாளர் ஒருவரை உள்ளடக்கும்;

"கம்பெனி" என்பது, இலங்கையில் அல்லது வேறிடத்தில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி என்று பொருள்படும் என்பதுடன், பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் உள்ளடக்கும்;

"உரித்துமாற்றம்" என்பது, விற்பனையின்மூலமான உரித்துமாற்றத்தையும், அத்துடன் எந்தச் சாதனத்தின்மூலம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அல்லது ஏதேனும் ஆதனத்திலுள்ள அக்கறை எதுவும் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஆதனம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

"புரிவெட்டி" என்பது, சாதனமொன்றின் தொடர்பில் ஏதேனும் முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்புச் செலுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது முத்திரைத் தீர்வை எதுவும் விதிக்கப்படற்பாலதல்ல என்னும் நிகழ்வை எடுத்தியம்புவதற்கென அல்லது குறித்துக் காட்டுவதற்கென ஆணையாளரின் பணிப்பின்கீழ் பயன்படுத்தப்படும் ஏதேனும் தகட்டினத்தை, ஆயுதத்தை, கருவியை அல்லது அதன் ஒரு பாகத்தை உள்ளடக்கும்;

"ஆவணம்" என்பது, ஏதேனும் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு சட்டத்தரணியின் நியமனத்தை, பிராதை, மறுமொழியை பதிலுரையை அல்லது வேறு வழக்குரையை, மனுவை, விண்ணப்பத்தை, சத்தியக் கடதாசியை, நியமனத்தை, அழைப்புக் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை, ஏதேனும் விவரணத்திலான கட்டளையை, நடுத் தீர்ப்பை, ஆணையை, எழுத்தாணையை, பொருட்பதிவேட்டை, கணக்கை, விதிப்பாணையை, முறியை, அல்லது பிணைமுறியை உள்ளடக்கும்;

"உரியமுறையில் முத்திரையிடப்பட்டது" என்பது, சாதனம் ஒன்றின் தொடர்பில்அச்சாதனம் தகுந்த தொகைக்குக் குறையாத ஒட்டுமுத்திரையொன்றை அல்லது பொறித்திட்ட முத்திரையொன்றைக் கொண்டுள்ளது எனவும், அத்தகைய முத்திரை, ஒட்டுமுத்திரையொன்றாக விருக்குமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய முத்திரை ஒட்டப்பட்டுப் பொறித்தழிக்கப்பட்டுள்ளது எனவும் பொருள்படும்;

"எழுதி நிறைவேற்றப்பட்டது" என்பதும், சாதனமொன்றின் தொடர்பில் பயன்படுத்தப்படுமிடத்து முறையே "ஒப்பமிடப்பட்டது' என்றும் 'ஒப்பம்' என்றும் பொருள்படும்;

"நிறைவேற்றுநர்" என்பது இறந்த ஆள் ஒருவரின் நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி என்று பொருள்படுமென்பதுடன்,

(அ) இறந்த ஆள் ஒருவரின் ஆதனத்தை உடைமையில் எடுக்கின்ற, அல்லது அதில் தலையிடுகின்ற எவரேனும் ஆளையும்;

(ஆ) இறந்த ஆளொருவரின் மரணச்சொத்துத் தொடர்பில் மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது நிருவாகத்தத்துவப்பத்திரம் வழங்கப்படுவதற்காக அல்லது மீள இலச்சினையிடப்படுவதற் காக மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பஞ்செய்ய உரித்துடைய எவரேனும் ஆளையும்,

(இ) நம்பிக்கைப் பொறுப்பொன்றை ஆக்குநரின் மரணசாதனம் மூலம் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின்கீழ் செய லாற்றுகின்ற நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரையும்,

உள்ளடக்கும்;

"நன்கொடை" என்பது, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் பணமாகவோ பணத்தின் பெறுமதியாகவோ பிரதிபயன் எதுவுமின்றித் தன்விச்சையாக ஒராளிடமிருந்து இன்னொருவருக்குக் கைமாற்றப் படுதல் என்று பொருள்படும்;

"இயலாதவராக்கப்பட்ட ஆள்" என்பது, எவரேனும் பராயமடையாதவர், பைத்தியம்பிடித்தவர், மூடன் அல்லது சித்தசுவாதீனமற்ற ஆள் என்று பொருள்படும்;

"பொறித்திட்ட முத்திரை" என்பது, பத்து ரூபாவை விஞ்சாத முத்திரைத் தீர்வையொன்று விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தின் தொடர்பில் புரிவெட்டியொன்றின் வழியாகப் பொறித்திட்ட முத்திரை கள் என்று பொருள்படும் என்பதுடன், அஞ்சல் அலுவலகத் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின்கீழ் பயன்

படுத்தப்படும் அஞ்சல் பெயர்ச்சுப் பொறியொன்றின் வழியாகப் பொறித்திட்ட முத்திரைகளையும் உள்ளடக்கும்;

"சாதனம்" என்பது, எந்த ஆவணத்தினால் ஏதேனும் உரிமை அல்லது பொறுப்பு உருவாக்கப்படுகின்றதோ, கைமாற்றப்படுகின்றதோ வரையறுக்கப்படுகின்றதோ, நீடிக்கப்படுகின்றதோ, அழிக்கப்படுகின்றதோ அல்லது பதியப்படுகின்றதோ அல்லது அவ்வாறு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றதோ அந்த ஆவணம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட மாகாணத்தின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் என்று பொருள்படும்;

"பணம்" என்பது, இலங்கை நாணயத்திலாயினுஞ்சரி, அந்நிய நாணயத்திலாயினுஞ்சரி, எடுத்தியப்பப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் உள்ளடக்கும்;

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள, அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"அற்றோனித் தத்துவம்" என்பது, ஏதேனும் சாதனத்தை எழுதிநிறைவேற்றும் ஆளுக்குப் பதிலாகவும் அவ்வாளின் பெயரிலும் செயலாற்றுவதற்கென குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் சாதனத்தை உள்ளடக்கும்;

"ஆள்" என்பது, ஒரு கம்பெனியை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்கும்;

"மாகாணம்" என்பது இலங்கையின் ..........மாகாணம் என்று பொருளாகும்;

"மாகாண வரி மதிப்பீட்டாளர்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட அரசிறை வரிமதிப்பீட்டாளர் என்று பொருளாகும்;

"மாகாண ஆணையாளர்" என்பது இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட மாகாண அரசிறை ஆணையாளர் என்று பொருளாகும்;

"மாகாணப் பிரதி ஆணையாளர்" என்பது, இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதி மாகாண அரசிறை ஆணையாளர் என்று பொருள்படும்;

"மாகாண சபை" என்பது மாகாணத்தின் மாகாண சபை என்று பொருளாகும்;

"முந்து பங்காளர்" என்பது, இலங்கையில் வதிவுள்ள முனைப்பான பங்காளர்களுள் –

(அ) பங்காண்மை உடன்படிக்கையில் முதலிற் பெயர்குறிப்பிடப்பட்ட; அல்லது

(ஆ) உடன்படிக்கை இல்லையாயின், பங்குடைமையின் வழமையான பெயரில் தனியாக அல்லது ஏனைய பங்காளர்களுக்கு முதலாவது பெயர்மூலம் அல்லது முதலெழுத்துக்கள்மூலம் குறிப்பிடப்பட்ட; அல்லது

(இ) வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் (4)ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூற்றில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்ட

பங்காளர் என்று பொருளாகும்;

"காலாண்டு" என்பது ஒவ்வோராண்டும் ஜனவரி 1ஆந் திகதி, ஏப்பிரல் 1ஆந் திகதி, ஜூலை 1ஆந் திகதி, அத்துடன் ஒக்டோபர் 1ஆந் திகதி ஆரம்பமாகும் மூன்று மாதங்கள்கொண்ட காலப்பகுதி என்று பொருளாகும்;

"நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்பது, எவரேனும் ஆளின் சார்பில் ஏதேனும் ஆதனத்தின் பரிப்பை, கட்டுப்பாட்டை அல்லது முகாமை யாளர் கொண்டுள்ள எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளர், பாது காவலர், காப்பாளர், முகாமையாளர், முகவர் அல்லது வேறு ஆள் என்பவரையும் உள்ளடக்கும்; ஆனால் நிறைவேற்றுநரை உள்ளடக்காது